# சட்டமும் நீங்களும்

# (LAW AND YOU)

25

## 2022ஆம் ஆண்டின் 31ஆம் இலக்க நொத்தாரிசு (திருத்தச்) சட்டத்தின் சிறப்பம்சங்கள்

## SALIENT FEATURES OF NOTARIES (AMENDMENT) ACT. No|:31 of 2022


**ஆக்கம்:**

**சட்டத்தரணி இராமலிங்கம் திருக்குமாரநாதன்**
**R.THIRUKUMARANATHAN, LL.B (COL.); LL.M (COL.),**
**ATTORNEY-AT-LAW**
**P.G Diploma in Criminology & Criminal Justice (J' PURA)**
**Diploma in Conflict Resolution (BCIS) (U PEACE – COSTARICA)**
**Diploma in forensic medicine & Science (CBO)**
**Diploma in Death investigation (CBO)**



**இலவச வெளியீடு:**

**நீதிக்கும் மாற்றத்திற்குமான நிலையம்,**
**இல 200/1, சுங்கவீதி, திருகோணமலை.**
**T.P.NO.0263260895**

## 2022ஆம் ஆண்டின் 31ஆம் இலக்க நொத்தாரிசு (திருத்தச்) சட்டத்தின் சிறப்பம்சங்கள்

# வெளியீட்டு உரை

நீதிக்கும் மாற்றத்திற்குமான நிலையம் ''சட்டமும் நீங்களும்'' என்ற குறுநூல் ஊடாக சட்டம் பற்றிய அறிவை பொதுமக்களுக்கு வழங்கி சட்டம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. இதன் பின்னணியில் பல தலைப்புகளில் இருபத்திநான்கு குறுநூல்கள் வெளிவந்துள்ளன. சட்டம் கற்கும் மாணவர்கள், இளம் சட்டதரணிகள், சட்டதுறையில் பணி ஆற்றுகின்றவர்கள் என்று பலரும் இக்குறுநூல்களினூடாக பயனடைந்துள்ளதாக அறியத்தருவதுடன் அடுத்தகுறுநூலை எதிர்பார்த்திருப்பதாக கூறியுள்ளனர். இந்த வகையில் 2023ம் ஆண்டுக்கானதும் 25வது குறுநூலாகவும் இந்த நூலை வெளியிடுவதில் CJC நிறுவனம் திருப்திப்படுகிறது.

இந்த நிலையில் CJC நிறுவனம் முக்கியமாக இரண்டு சட்டத்தரணிகளை நன்றியுடன் நினைவில் கொள்கிறது. நமது சட்ட மாணவர்களுக்கும் இளம் சட்டத்தரணிகளுக்கும் இப்படிப்பட்ட ஆக்கபூர்வமான செயல் ஒன்றினை செய்யவேண்டும் என பிடிவாதமாக CJC நிறுவனத்தின் பணிப்பாளரான என்னை இதில் ஈடுபடவைத்தவர் எமது மதிப்புக்குரிய மூத்த சட்டத்தரணி இரா. திருக்குமாரநாதன் ஆவார். தனது வேலைப்பழுவின் மத்தியிலும் பல குறுநூல் ஆக்கங்களை ஆரம்ப காலத்தில் எழுதித்தந்தவர் இவரே. இத்தருணத்தில் நாம் நன்றியுடன் இவரை நினைவுகூர்கிறோம். இவருடைய இப்பணி தொடரவேண்டும் என ஆசிக்கிறோம்.

சட்டம் பற்றிய அறிவை சாதாரண மக்கள். மத்தியில் தமிழ் மொழியில் வளர்க்க விடாமுயற்சியுடன் ஈடுபட்ட அடுத்து மூத்த சட்டதரணி திரு. K.G. ஜோன் ஆவார். இவருடைய ஆக்கங்கள் வீரகேசரி பத்திரிகையில் தொடர்ந்து வெளிவந்த காலமது. அவரை அணுகி தெரிவுசெய்யப்பட்ட கட்டுரைகளை தொகுத்து குறுநூல்களாக வெளியிட அனுமதி கேட்டவேளையில் உடன் அனுமதி தந்தது மட்டுமல்ல எங்களை வழிநடத்தியவர் இவர். மூத்த சட்டதரணி திரு. K.G. ஜோன் அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றிகள்.

இந்த இருபத்தி ஐந்தாவது குறுநூலின் உள்ளடக்கம் அண்மையில் திருத்தப்பட்ட 2022 ம் ஆண்டின் 31ம் இலக்க நொத்தாரிஸ் கட்டளை சட்டத்தின் முக்கிய அம்சங்கள் என்ன கூறுகிறது என்பதை விளக்குகிறது. மூத்த சட்டத்தரணி இரா.திருக்குமாரநாதன் அவர்கள் இதன் ஆக்கத்தை உருவாக்கிய ஆசிரியர். ஒரு நொத்தாரிசின் கடமைகளும் பொறுப்புக்களும் யாவை? என்பது பற்றிய தெளிவான விளக்கத்தை அளிப்பதுடன் பொதுமக்களுக்கும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள திருத்தங்கள் எப்படிப்பட்ட பாதுகாப்புக்களை வழங்குகிறது என்றும் இலகு தமிழில் எடுத்தியம்புகிறது. சட்டக்கல்வியை தொடரும் மாணவர்கள் எதிர்காலத்தில் அறிந்திருக்கவேண்டிய பல விடயங்கள் பற்றிய விளக்கங்கள் இக்குறுநூலில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அறிவை வளர்த்தால் சிறந்த சேவையை வழங்க முடியும்.

**Rev. Fr. V. Yogeswaran**
**Director**

**Centre for Justice and Change**
**200/1, Customs Road**
**Trincomalee**
**Contact No. 0263260895**

දිසා විනිසුරු නිල කාමරය
மாவட்ட நீதிபதியின்
உத்தியோகபூர்வ அறை
District Judge's
Chamber
026 - 2222480

දිසා විනිසුරු නිල නිවස
மாவட்ட நீதிபதியின
உத்தியோகபூர்வ வாசஸ்தலம
District Judge's Bungalow
026 - 2222288

රෙජිස්ට්‍රාර්
பதிவாளர்
Registrar
026-2222293

ඊ-මේල්
ஈ-மேயில்
e-mail
dctincomalee@gmail.com

මගේ අංකය
எனது இல
My No.
DCT/

ඔබේ අංකය
உமது இல
Your No.

දිනය
திகதி
Date

දිසා අධිකරණය, ත්‍රිකුණාමලය
மாவட்ட நீதிமன்றம் திருகோணமலை
District Court of Trincomalee.

## <u>நொத்தாரிசு (திருத்தச்) சட்டத்தின் சிறப்பம்சங்கள்</u>

**அணிந்துரை**

நொத்தாரிசு திருத்தச் சட்டத்தின சிறப்பம்சங்கள் குறித்து தமிழில் ஒரு சட்ட நூல் வெளிவருது கனிஷ்ட சட்டத்தரணிகள் முதல் சிரேஷ்ட சட்டத்தரணிகளுக்கு மட்டுமல்ல நீதிபதிகளுக்கும் பயனுள்ள நூலாக சிறந்த முறையில் அலசி ஆராய்ந்து சட்டத்தமிழில் பாமரனும் வாசித்து உணர்ந்து கொள்ளத்தக்க வகையில் எழுதப்பட்டிருப்பது பாராட்டுவதற்கு உரியது.

சாதாரண பொதுமக்கள் சட்டத்தரணிகளை தமது காணிப்பிணக்குகள் தொடர்பில் அணுகுகின்ற போது சட்டத் தவறுகளை அவர்களும் உணர்ந்து கொள்ள வேண்டிய தேவை உள்ளது.

நீதிமன்றங்களில் காணிப் பிணக்குகள் வருகின்ற போது நொத்தாரிசுகளும், சட்டத்தரணிகளும் விடுகின்ற தவறுகள் பொதுமக்களுக்கு பாரிய பண செலவினையும் மன உளைச்சலையும் தருவதாக இருப்பதை நீதிபதிகளாகிய நாம் பல வழக்குகளில் காண்கின்றோம்.

திருமலையில் மூத்த சட்டத்தரணி இராமலிங்கம் திருக்குமரநாதன் அவர்கள் குறிப்பாக குடியியல் வழக்குகளில் சட்ட நடைமுறைகள் சரியாக பின்பற்றப்படல் வேண்டும் என்பதில் உறுதியாக இருப்பவர். பல்லாண்டு கால அனுபவமிக்கவர்.
இந்நூலில் அதன் பிரதிபலிப்பை உணரக் கூடியதாக இருப்பதுடன் கூறப்பட்ட சட்ட விடயங்கள் உரிய தரப்பினரை சென்றடைய வேண்டுமென்ற ஆவர்மும் வெளிப்பட்டு நிற்பதை காணக் கூடியாக உள்ளது.

இங்கு நூலை அலசி ஆராய்ந்து தீர்ப்பளிப்பது எனது வேலையல்ல. ஆனாலும் இந்நூலின் முக்கியத்துவம் உணர்ந்து சட்டத்தரணிகள், நீதிபதிகள் குறிப்பாக தமிழில் தீர்ப்புக்கள் எழுதுகின்ற போது நீதிபதிகளாகிய எங்களுக்கு மிகவும் பயனுள்ள நூலாக அமைந்திருப்பது பாராட்டுக்குரியது. மூத்த சட்டத்தரணி திருக்குமரநாதன் அவர்களின் அயராத தளராத முயற்சியும், சட்டத்துறைக்கு அவர் ஆற்றும் பங்களிப்பும் தொடர எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

மாணிக்கவாசகர் கணேசராஜா

மாவட்ட நீதிபதி,

திருகோணமலை.

**M.GANESHARAJAH**
**District Judge**
**District Court**
**Trincomalee**

## 2022ஆம் ஆண்டின் 31ஆம் இலக்க நொத்தாரிசு (திருத்தச்) சட்டத்தின் சிறப்பம்சங்கள்

# மேன்மையுரை

மூத்த சட்டத்தரணி இரா. திருக்குமாரநாதன் எனக்கு நண்பர். கொழும்பு பல்கலைக்கழகத்திலே சட்டப்பட்டதாரியாகி அங்கேயே விரிவுரையாளராகி, அதன் பின்னர் சட்டமுதுமாணியானவர். இன்று திருகோணமலை மாவட்டத்தின் மூத்த வழக்கறிஞர்.

தொழிலுடன் மட்டும் தன்னுடைய பணிகளை மட்டுப்படுத்தாமல் சட்டங்களை மக்கள் தெளிவாக அறிந்து கடைப்பிடிக்கும் வகையில் எளிமைப்படுத்தி கையேடுகளாக, கைச்சுவடிகளாக, கைந்நூல்களாக (Hand Book) ஆக்கம் செய்பவர்.

இவர் இற்றைவரை **"சட்டமும் - நீங்களும்" (LAW AND YOU)** எனும் தலைப்பிலான **கைந்நூல்கள் (Hand Books)** வரிசையில்:

**01. இல்லத்து வன்முறைத் தடுப்புச் சட்டம் (2010**).

(Law of Prevention of Domestic Violence)

**02. பராமரிப்பு விண்ணப்பம் தொடர்பான சட்டம் (2010).**

(Law Relating to Maintenance application)

**03. பிள்ளையின் கட்டுக்காவல் மற்றும் பாதுகாவல் தொடர்பான சட்டம் (2011).**

**(Law Relating to Guardianship and Custody of the child)**

**04. பிள்ளையை மகவேற்பது தொடர்பான சட்டம் (2011)**

(Law Relating to Adoption of the child)

**05. தொழிலாளர் உரிமை தொடர்பான சட்டம் (2012).**

(Law Relating to Workers right)

**06. திருமணம் மற்றும் விவாகரத்து தொடர்பான சட்டம் (2012).**

(Law Relating to Marriage and Divorce)

ஆகிய ஆறு (06) கைந்நூல்களை (Hand Books) ஆக்கம் செய்துள்ளார்.

**"நொத்தாரிசு திருத்தச் சட்டத்தின் சிறப்பம்சங்கள்"** எனும் தலைப்புடனான அவரது ஏழாவது கைந்நூல் தற்போது வெளிவருகின்றது.

**Notary Public** என்ற தொழிலுக்குரியவர், ஒலிமாற்றம் செய்யப்பட்டு நொத்தாரிசு என்றே தமிழ் மொழி பேசுவோரால் இற்றைவரை அழைக்கப்படுகின்றார். இவ்வாங்கிலச் சொற்றொடருக்குரிய தமிழ்ச்சொல் பயன்பாட்டில் இல்லை. எமது சட்டப்புலமையாளர்கள் இதற்கான தமிழ்ச்சொல்லை/ சொற்றொடரை அறிமுகம் செய்யாமல் இருப்பது ஏனென்று விளங்கவில்லை. பொருத்தமான சொற்களை ஆக்கி அளிப்பதில் எமக்குள்ள சோம்பல்நிலை நீக்கப்படல் வேண்டும். இது தொடர்பாக அகரமுதலி (அகராதி) களிலே காணப்படும் பொருத்தமான சொற்களைக் கூறித் தொடர்கின்றேன்.

## Notary Public:

### 01. சான்றுறுதி அலுவலர், சான்றுறுதியர்.

(அருங்கலைச் சொல் அகரமுதலி, ஆங்கிலம் - தமிழ், முதன்மைப் பதிப்பாசிரியர், ஆய்வறிஞர், ப. அருளி, தூயதமிழ் சொல்லாக்க அகரமுதளித் துறை, தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

### 02. சான்று அலுவலர்.

(ஆங்கிலம் - தமிழ்ச் சொற்களஞ்சியம், சென்னைப் பல்கலைக்கழகம், A. சிதம்பரநாதச் செட்டியார், பதிப்பாசிரியர்)

**"சட்டம் ஓர் இருட்டறை, அதில் வக்கீலின் வாதம் ஒரு கைவிளக்கு"** என்றார் அறிஞர் அண்ணாத்துரை. சட்டம் அனைவருக்கும் பொதுவானது, அனைவரும் அறிந்திருக்க வேண்டியது. சட்டம் தெரியாதென்று யாரும் தப்பிக்கொள்ள இயலாது என்பன போன்ற கூற்றுக்களும் நம்மிடையே

விளங்குகின்றன. மேலே கூறப்பட்ட கூற்றுக்களின் அடிப்படையில் நோக்கும் போது நடைமுறைச் சட்டங்கள் பற்றி மக்கள் அறிந்திருக்க வேண்டியது கட்டாயமாகின்றது.

நீதிமன்றுடன் தொடர்புபட்டவர்கள் மட்டுமே சட்டத்தை அறிந்து விளங்கிக் கொள்ளும் நிலை மாறவேண்டும். சட்டம் தொடர்பான அறிவும் விளங்கிக் கொள்ளும் திறனும் நாட்டுமக்கள் அனைவருக்கும் கிடைக்கவேண்டும் என்ற நன்நோக்கில் இக்கையேடு ஆக்கப்பட்டுள்ளது.

படிப்பவர்கள் எளிதாக விளங்கிக்கொள்ளும் வகையில் **“வினா - விடை”** வடிவில் இக்கையேட்டினை மூத்த சட்டத்தரணி இரா. திருக்குமாரநாதன் அவர்கள் ஆக்கியுள்ளார். இவர் தொகுத்து முன்னர் வெளிவந்த கையேடுகளைப் போன்று இக்கையேடும் மக்களுக்குக் கூடுதல் பயனளிக்கும் என்று நம்புகின்றேன்.

**“இணர்வாழ்த்தும் நாறாமலர் அனையர் கற்றது**
**உணரவிரித்து உரையாதார் ” - (திருக்குறள் - 650).**

தாம் கற்ற ஒன்றைப் பிறர் விரும்பிக் கேட்கத்தக்கவாறு விரித்துரைக்க இயலாதவர் கொத்துக்கொத்தாகப் பூத்திருந்தாலும் மணம் கமழாத மலருக்கு நிகராவர்.

மேலே காட்டப்பட்டுள்ள திருக்குறளுக்கு அமைவாக, தான் கற்றுக்கொண்ட சட்ட விடயங்களை அனைத்துத் தரப்பினரும் நன்கு அறிந்து கொள்ளத்தக்கவாறு எழுதி மூத்த சட்டத்தரணி திருக்குமாரநாதன் அவர்கள் வெற்றி கண்டுள்ளார் என்பதை இக்கையேட்டினைப் படிப்போர் ஏற்றுக்கொள்வர் என்று நம்புகின்றேன்.

இக்கையேடு மக்களிடம் சென்றடைந்தால் அவர்கள் சட்டம் பற்றி அறிவதுடன் சட்டத்துக்குட்பட்டு வாழவும் கற்றுக்கொள்வர். ஆகவே தொடர்ந்தும் இவ்வகையான இன்றியமையாத, பொருத்தமான சட்ட விடயங்களைத் தெரிவு செய்து அவை கையேடுகளாக ஆக்கப்பட்டு வெளியிடப்பட வேண்டும் என்ற எனது பெருவிருப்பை பதிவுசெய்கின்றேன்.

**க. கனகசிங்கம்.**
**ஓய்வுநிலை அதிபர்,**
**கட்டைப்பறிச்சான்**
**மூதூர்.**

## 2022ஆம் ஆண்டின் 31ஆம் இலக்க நொத்தாரிசு (திருத்தச்) சட்டத்தின் சிறப்பம்சங்கள்[1]

## நூலாசிரியரின் உரை:

### "இறவாத புகழுடைய புதிய நூல்கள் தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும்"

[1] SALIENT FEATURES OF NOTARIES (AMENDMENT) ACT. No|:31 of 2022

- பாரதியார் -

தமிழ் மொழியிலும் தமிழ் தேசியத்தின் மீதும் பேரன்பு கொண்ட தமிழ் மொழி பேசும் மாணவர்கள் தற்காலத்தில் தமிழ் மொழியில் சட்டக் கல்வி கற்பதையே அதிகம் விரும்புகின்றனர். அருந்தமிழ் மொழியில் சட்டக் கல்வியை கற்பிக்கும் ஆர்வமும் ஆற்றலும் கொண்ட விரிவுரையாளர்கள் (Lecturers) தற்போது அதிகம்பேர் உள்ளனர். வடக்குக் கிழக்கு மாகாணங்களில் செயற்படும் நீதிமன்றங்களின் வழக்குரை மொழியும் தற்போது தமிழ் மொழியாகவே உள்ளது.

எனவே, இந்நிலையில் சட்டத்தைப் பற்றிய நூல்கள் அதிகம் தமிழ் மொழியில் ஆக்கப்படவேண்டியது இன்றைய காலத்தின் கட்டாய தேவையாகும். ஆனாலும் சட்ட நூல்களை தமிழ் மொழியில் ஆக்கம் செய்யும் செயற்பாட்டை செயற்படுத்துவதில் சட்டத்தில் புலமை பெற்றுள்ள கல்விமான்களின் ஆர்வம் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றன. இதன் காரணமாக சட்டத்தைப் பற்றிய தமிழ் மொழியிலான நூல்களும் மிகவும் அரிதாகவே இங்கு காணப்படுகின்றன.

சட்டக் கோட்பாடுகள் (Legal Theories), சட்ட விதிகள் (Legal Rules/ Legal Principles) மற்றும் சட்ட நடவடிக்கைமுறைகள் (Legal Procedures) என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு ஆங்கில மொழியில் எழுதப்பட்டுள்ள சட்ட நூல்களை உள்ளவாறே தமிழ் மொழியில் மொழிபெயர்க்கப்பட்டு தமிழ் மொழியிலான

சட்ட நூல்களாக ஆக்கம் செய்யும்போது அவற்றை எளிய தமிழில் இலகு தமிழில் அழகு தமிழில் இனிய தமிழில் வெளிக்கொண்டுவருவது என்பது கடினமான காரியம்.

மேலும், ஆங்கில மொழியில் எழுதப்பட்டுள்ள சட்ட நூல்கள் உள்ளவாறே தமிழ் மொழியில் மொழிபெயர்க்கப்பட்டு தமிழ் மொழியிலான சட்ட நூல்களாக ஆக்கம் செய்யப் பட்டிருப்பினும் தமிழ் மொழியில் சட்டக் கல்வி கற்கும் மாணவர்களினது நாட்டமும் பார்வையும் ஈர்ப்பும் அத்தகைய சட்ட நூல்கள் மீது மிகவும் குறைவாகவே உள்ளது.

தமிழ் மொழியில் சட்ட நூல்கள் ஆக்கம் செய்யப்படும்போது எளிய தமிழிலும் இலகு தமிழிலும் அழகிய தமிழிலும் ஆக்கம் செய்யப்படுவது மட்டுமல்லாமல் அத்தகைய நூல்களில் எடுத்துரைக்கப்படும் சட்டக் கோட்பாடுகளுக்கும் (Legal Theories) சட்ட விதிகளுக்கும் (Legal Rules/ Legal Principles) மற்றும் சட்ட நடவடிக்கைமுறைகளுக்கும் (Legal Procedures) சிறிதளவேனும் சிதைவு ஏற்படாதவாறு ஆக்கம் செய்யப்படுதல் வேண்டும்.

அவ்வாறாகச் சட்ட நூல்கள் தமிழ் மொழியில் ஆக்கம் செய்யப்படுமாயின் தமிழ் மொழியில் சட்டக் கல்வி கற்கும் மாணவர்களினது நாட்டமும் பார்வையும் ஈர்ப்பும் அவற்றின் மீது அதீதமாக இருக்கும். தமிழ் மொழியில் வழக்குரைகளைத் தயார்செய்யும் மற்றும் நீதிமன்றின் முன் தமிழ் மொழியில் தமது வாதத்தை முன்வைக்கும் சட்டத்தரணிகளுக்கும் அது பேருதவியாகவும் உந்து சக்தியாகவும் அமையும்.

சாதாரண பாமர மக்களினது நாளாந்த வாழ்க்கையுடன் தொடர்புடைய சட்டம் சார்ந்த சிறுநூல்களாக **“சட்டமும் நீங்களும்”** **(LAW AND YOU)** எனும் தலைப்பினைக் கொண்ட தொடர்ச்சியான ஆறு சிறுநூல்கள் (06 - Booklets) என்னால் ஆக்கம் செய்யப்பட்டு **USAID** இன் நிதி அனுசரணையுடன் திருக்கோணமலை உட்துறைமுக வீதியில் 238 ஆம் இலக்கத்தில் செயற்பட்டுவந்த **“மனித உரிமைகள் மேம்பாட்டிற்கும் பாதுகாப்பிற்குமான நிலையம்” (Centre for the Promotion and Protection of Human Rights)** என்ற நிறுவனம் பல வருடங்களுக்கு முன்பிருந்தே இலவசமாக வெளியீடு செய்து வந்துள்ளது. குறித்த வெளியீடுகள் தொடர்பில் மேற்குறித்த நிறுவனத்தினதும் அதனது அப்போதைய பணிப்பாளர் அருட்தந்தை சட்டத்தரணி வீ.யோகேஸ்வரன் அவர்களிதும் பங்களிப்பு அளப்பரியது.

பல வருடங்கள் கழிந்து, அதாவது நீண்ட இடைவெளிக்குப் பின்பு எனது “7வது சட்டச் சிறுநூலாகவும்” **(7TH LAW BOOKLET)** “சட்டமும் நீங்களும்” **(LAW AND YOU)** எனும் தொடரின் “25வது சிறுநூலாகவும்” **(25TH BOOKLET)** **“நொத்தாரிசு (திருத்தச்) சட்டத்தின் பிரதான சிறப்பம்சங்கள்” [SALIENT FEATURES OF NOTARIES (AMENDMENT) ACT] No:31 of 2022** எனும் தலைப்பில் இந்நூலை ஆக்கம் செய்வதில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன்.

திருக்கோணமலை நீதிமன்றங்களில் சட்டத்தரணிகளாகத் தொழில்புரியும் பல இளஞ் சட்டத்தரணிகள் **“2022 ஆம்**

**ஆண்டின் 31 ஆம் இலக்க நொத்தாரிசு (திருத்தச்) சட்டம்"** தொடர்பிலான விரிவுரை ஒன்றை நடாத்துவதற்கு ஏற்பாடுசெய்யுமாறு என்னிடம் கோரிக்கை ஒன்றை முன்வைத்ததை அடுத்து அதற்கான ஆயத்தத்தை நான் மேற்கொண்டபோது மேற்குறித்த விடயம் பற்றிய கட்டுரை ஒன்றை வடிவமைப்பதற்கு ஆரம்பத்தில் நான் எண்ணியிருந்தபோதிலும், இளஞ் சட்டத்தரணிகள், சட்டக் கல்விகற்கும் மாணவர்கள், வங்கிகள் மற்றும் ஏனைய நிறுவனங்களைச் சார்ந்தவர்கள், சாதாரண பிரஜைகள் உட்பட அனைவரும் இலகுவாக விளங்கிக்கொள்ளும் வகையில் குறித்த திருத்தச் சட்டம் தொடர்பான சிறுநூல் ஒன்றை வெளிக்கொண்டுவருவது தற்போது பொருத்தமானது என்ற எனது எண்ணத்தின் வெளிப்பாடே இச்சிறு நூலின் ஆக்கமாகும்.

இந்நூலை உரிய நேரத்தில் இலவச வெளியீடாகக் வெளிக்கொண்டுவருவதற்கு முன்வந்துள்ள திருக்கோணமலை சுங்க வீதியில் 200/1 ஆம் இலக்கத்தில் தற்போது செயற்பட்டுவருகின்றன **"நீதிக்கும் மாற்றத்திற்குமான நிலையத்தின்" (CENTRE FOR JUSTICE AND CHANGE )** பணிப்பாளர் அருட்தந்தை சட்டத்தரணி வீ.யோகேஸ்வரன் அவர்களுக்கும் குறித்த நிறுவனத்தின் ஏனைய உறுப்பினர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்நூலை வெளியீடுசெய்கின்ற அதே நேரத்தில், மேலும் ஒரு சிறுநூலை ஆக்கம் செய்து தருமாறு குறித்த **"நீதிக்கும் மாற்றத்திற்குமான நிலையத்தின்" (CENTRE FOR JUSTICE AND CHANGE )** பணிப்பாளர் என்னிடம்

வேண்டுகோள் ஒன்றை முன்வைத்துள்ளார். எனவே அவரது வேண்டுகோளுக்கு அமைவாக **“2022 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க அற்றோணித் தத்துவ (திருத்தச்) சட்டம் [POWERS OF ATTORNEY (AMENDMENT) ACT NO: 28 OF 2022]**, **2022 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க விருப்பாவணங்கள் (திருத்தச்) சட்டம் WILLS (AMENDMENT) ACT NO: 29 OF 2022, 2022 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க மோசடிகளைத் தடுத்தல் (திருத்தச்) சட்டம் [PREVENTION OF FRAUDS (AMENDMENT) ACT NO: 30 OF 2022]** **மற்றும் 2022 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க ஆவணங்களைப் பதிவுசெய்தல் (திருத்தச்) சட்டம் REGISTRATION OF DOCUMENTS (AMENDMENT) ACT No: 32 OF 2022” ஆகியவற்றினது சிறப்பம்சங்களின் தொகுப்பாக** எனது அடுத்த சிறுநூல் ஆக்கம் செய்யப்படவிருக்கின்றது.

மேலும், **“அமைதிக் குலைவுடனான காணிப் பிணக்குகளுக்கான தீர்வு தொடர்பான பொறிமுறை”(THE MECHANISM FOR RESOLUTION FOR DISPUTES OF THE LAND WITH BREACH OF PEACE)** எனும் தலைப்பிலான இன்னும் ஒரு சிறுநூலும் ஆக்கம் செய்யப்படவிருக்கின்றது. மேற்குறித்த பொறிமுறையின் செயற்பாடு **(THE OPERATION OF THE SAID MECHANISM)** பற்றிய சிறுநூலானது **1979 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க ஆரம்ப நீதிமன்ற நடவடிக்கைமுறைச் சட்டத்தின் 66 தொடக்கம் 76 (PROVISIONS OF SECTIONS 66 to 76 OF THE PRIMARY COURT PROCEDURE ACT OF 44 OF 1979)** வரையிலான பிரிவுகளில் காணப்படும் ஏற்பாடுகளையும் அவற்றோடு தொடர்புடைய உச்ச நீதிமன்றங்களின் அண்மைக்காலத் தீர்ப்புக்களையும் அடிப்படையாகக் கொண்டு ஆக்கம் செய்யப்படவிருக்கின்றது. இந்த இருநூல்களுக்குமான

ஆக்கச் செயற்பாடுகள் தற்போது என்னால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதையும் நான் மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அழகாகவும் இனிதாகவும எளிதாகவும் சொல்வது என்பது தமிழ் மொழிக்கே உரித்தான பொக்கிஷமாகும். எனவே "சொல்லும் திறன் தமிழ் மொழிக்கு இல்லை" என்று யாரும் எண்ணுதல் ஆகாது.

வாசகர்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களும் விமர்சனங்களும் எதிர்பார்க்கப்படுகின்றன. இவை அடுத்துவரும் சிறுநூல்களை மேலும் சிறப்பாக ஆக்குவதற்கு ஆதரவாகவும் உந்துசக்தியாகவும் அமையும் என்பதையும் நான் இத்தால் மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**சட்டமும் தமிழும் இணைந்து வளரட்டும்! சட்டத்தால் தமிழ் மொழியை நாங்கள் வளர்ப்போம்!**

**இராமலிங்கம் திருக்குமாரநாதன்.**
**மூத்த சட்டத்தரணி,**
**இல: 127, புனித மரியாள் வீதி,**
**திருகோணமலை.**

# நொத்தாரிசு கட்டளைச்சட்டம் (NOTARIES ORDINANCE)

## அறிமுகம் (INTRODUCTION):

நொத்தாரிசு (சான்றுரைப்பவர்) ஒருவர் நொத்தாரிசு கட்டளை சட்டத்திலும் அதனுடன் தொடர்புடைய எனைய சட்டங்களிலும் எடுத்துரைக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக உரிய முறையில் உறுதிகளையும் சாதனங்களையும் (Deeds and Instruments) தயாரிப்பதற்கும் சான்றுரைப்பதற்கும் (drafting and attesting ) உரித்துடையவர் ஆவார். ஒவ்வொரு நொத்தாரிசும் (சான்றுரைப்பவரும்) நொத்தாரிசு கட்டளைச் சட்டத்தில் எடுத்துரைக்கப்பட்டுள்ள நடவடிக்கைமுறைகளை உரியமுறையில் செயற்படுத்தி அவர்களது சேவை பெறுநர்களாக (their clients) விளங்கும் சாதாரண பொது மக்களுக்கு மிகவும் சிறப்பான சேவையை வழங்க வேண்டிய கட்டாயமான கடமையையும் கடப்பாட்டையும் பொறுப்பையும் கொண்டுள்ளார்கள்.

நொத்தாரிசு (சான்றுரைப்பவர்) ஒருவர் குறித்த தனது கடமையையும் கடப்பாட்டையும் பொறுப்பையும் மீறிச் செயற்படும்போது அல்லது அவற்றுக்கு முரணாகச் செயற்படும்போது அவரது சேவைபெறுநர்களான (his clients) சாதாரண பொதுமக்களே இறுதியில் பாதிப்படைகின்றார்கள்.

நொத்தாரிசு (சான்றுரைப்பவர்) ஒருவர் குறித்த தனது கடமையையும் கடப்பாட்டையும் பொறுப்பையும் மீறிச் செயற்படும்போது அல்லது அவற்றுக்கு முரணாகச் செயற்படும்போது ஏற்படும் விளைவுகள் எவை என்பது பற்றி 2022 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க நொத்தாரிசு (திருத்தச்) சட்டத்தில்[2] மிகவும் தெளிவாக

[2] Notaries (Amendment) Act No: 31 of 2022.

விவரிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான பொறிமுறையும் (Mechanism) குறித்த (திருத்தச்) சட்டத்தில் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.[3]

நொத்தாரிசுகளின் செயற்பாடுகள் பற்றி எடுத்துக் கூறும் முதன்மைச் சட்டவாக்கமான (Principal enactment) நொத்தாரிசு கட்டளைச் சட்டம் நொத்தாரிசு ஒருவருக்கு உரிய உரிமைகள், கடமைகள், கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் என்பன பற்றிய தெளிவான ஏற்பாடுகளைக் கொண்டுள்ளது.

குறித்த முதன்மைச் சட்டவாக்கத்தில் உள்ள ஏற்பாடுகளிள் பிரகாரம் சட்டத்தரணியாக அல்லாத ஒருவர் நொத்தாரிசாகத் தொழில் புரிவதற்கான நியமனத்தையும் (Appointment) ஆணையையும் (Warrant) பெறுவதற்கான தகைமைகள் எவை எனவும் மற்றும் அது தொடர்பில் எத்தகைய நடவடிக்கைமுறைகளைப் (PROCEDURES) அவர் பின்பற்றல் வேண்டும் என்பது பற்றியும் இச்சிறுநூலின் இறுதியில் சுருக்கமாக எடுத்துரைக்கப் படுகின்றது.

குறித்த முதன்மைச் சட்டவாக்கமானது 1907 ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க நொத்தாரிசு கட்டளைச்சட்டம் (Notaries Ordinance No: 01 of 1907) எனும் தலைப்பைக்கொண்டு 1907ஆம் ஆண்டில் செயற்பாட்டுக்கு வந்துள்ளதுடன், காலத்துக்காலம் அதில் பல திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

---

[3] Section: 34(1) (a) (b) & (c).

அத்தகைய திருத்தங்களாக இதன்பின்னர் விவரிக்கப்படும் திருத்தக் கட்டளைச்சட்டங்கள், (Amendment Ordinances) அதாவது 1909 ஆம் ஆண்டின் **27** ஆம், 1910ஆம் ஆண்டின் 18 ஆம், 1917 ஆம் ஆண்டின் 31 ஆம், 1919 ஆம் ஆண்டின் 22 ஆம், 1927 ஆம் ஆண்டின் 31 ஆம், 1934 ஆம் ஆண்டின் 31 ஆம், 1936 ஆம் ஆண்டின் 10 ஆம், 1943 ஆம் ஆண்டின் 07 ஆம், 1943 ஆம் ஆண்டின் 59 ஆம், 1944 ஆம் ஆண்டின் 61 ஆம், 1947 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கங்களைக் கொண்ட திருத்தக் கட்டளைச் சட்டங்கள் மற்றும் ஏனைய திருத்தச் சட்டங்களாக (other amendment Acts), அதாவது 1951 ஆம் ஆண்டின் 06 ஆம், 1973 ஆம் ஆண்டின் 24 ஆம், 1976 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்கங்களைக் கொண்ட திருத்தச் சட்டங்கள் என்பவை காலத்திற்குக் காலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

அண்மைக் காலத்தில் இலங்கையின் பாராளுமன்றத்தில் பல முன்னேற்றகரமான சட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. அவற்றில் **2022 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க நொத்தாரிசு (திருத்தச்) சட்டம்** மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு சட்டமாகக் கருதப்படுகின்றது. குறித்த நொத்தாரிசு (திருத்தச்) சட்டமானது 2022 ஆம் ஆண்டின் கார்த்திகை மாதத்தின் ஆரம்பத்தில் இருந்து செயற்பாட்டுக்கு வந்துள்ளது.

மேற்குறித்த திருத்தச் சட்டத்தில் புதிய சட்டத்தரணி ஒருவர் நொத்தாரிசாகத் தொழில் புரிவதற்கான நியமனத்தையும் (Appointment) ஆணையையும் (Warrant) பெறுவதற்கான தற்போதைய தேவைப்பாடுகள் எவை மற்றும் அது தொடர்பில் எத்தகைய நடவடிக்கை முறைகளை (PROCEDURES) அவர் பின்பற்றல் வேண்டும் என்பது பற்றி விவரமாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

குறித்த நொத்தாரிசு (திருத்தச்) சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ள அதே தினத்தில் 2022 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க அற்றோணித் தத்துவ (திருத்தச்) சட்டம்,[4] 2022 ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க விருப்பாவணங்கள் (திருத்தச்) சட்டம்,[5] 2022 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க மோசடிகளைத் தடுத்தல் (திருத்தச்) சட்டம்,[6] மற்றும் 2022 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க ஆவணங்களைப் பதிவுசெய்தல் (திருத்தச்) சட்டம்[7] என்பவையும் நிறைவேற்றப்பட்டுள்ளன.

மேற்குறித்த திருத்தச் சட்டங்கள் யாவும் நாளாந்தம் நடைபெறுகின்ற காணி மற்றும் அசையா ஆதனக் கைமாற்றங்கள் / உரித்து மாற்றங்கள் என்பவற்றுடன் மிகவும் நெருக்கமான தொடர்பைக் கொண்டுள்ளன. எனவே மேற்குறித்த திருத்தச் சட்டங்களின் உள்ளடக்கங்கள் பற்றி சாதாரண பொதுமக்களும் அறிந்திருக்க வேண்டியது மிகவும் முக்கியமானதாகும்.

நொத்தாரிசு ஒருவர் தனது நாளாந்த தொழில்ரீதியான கடமைகளின்போது i) அறுதி உறுதி / கைமாற்றல் உறுதி (Deed of Transfer), ii) நிபந்தனையுடனான அறுதி உறுதி (Deed of Transfer with Condition), iii) மீளப்பெறப்படமுடியாத நன்கொடை உறுதி (Irrevocable Deed of Gift), iv) சீவிய உரித்துடனான நன்கொடை உறுதி (Deed of Gift with Life Interest), v) சீதன உறுதி (Deed of Dowry), vi) பிரிவிடுதல் உறுதி (Deed of Partition), vii) பரிமாற்றல் உறுதி (Deed of Exchange) மற்றும் viii) பாதை உரித்தினைக் கையளிப்பதற்கான உறுதி (Deed for granting

[4] Powers of Attorney (Amendment) Act No: 28 of 2022.
[5] Wills (Amendment) Act No: 29 of 2022.
[6] Prevention of Frauds (Amendment) Act No: 30 of 2022.
[7] Registration of Documents (Amendment) Act No: 32 of 2022.

Right of Way) போன்ற, காணி அல்லது அசையா ஆதனத்தின் மீதான சொத்தாண்மையை / சொத்துவத்தை மற்றும் அவை தொடர்பான உரித்துக்களைக் கைமாற்றுவது தொடர்பிலான மிகவும் முக்கியமான உறுதிகளைத் தயார்செய்து அவற்றை சான்றுப்படுத்தும்போது மேற்குறித்த புதிய திருத்தச் சட்டங்களில் உள்ள ஏற்பாடுகளைக் கட்டாயமாகவும் உரியமுறையிலும் கடைப்பிடித்து அவற்றைச் சிறப்பான முறையில் செயற்படுத்துதல் வேண்டும்.

மேலும், நொத்தாரிசு ஒருவர் காணி மற்றும் அசையா ஆதனங்கள் தொடர்பில் (i) விற்பனைச் சான்றிதழ் (Certificate of Sale ), (ii) பிஸ்கால் உறுதி/பதிவாளர் உறுதி (Fiscal's Coveyance / Registrar's Coveyance), (iii) நிர்வாகஸ்தர் உறுதி (Administrator's Conveyance), (iv) நிறைவேற்றுனர் உறுதி (Executor's Coveyance), (v) குத்தகை உறுதி (Deed of Lease), (vi) அடைமான உறுதி (Deed of Mortgage), vii) அற்றோணித் தத்துவம் (Power of Attorney) (viii) விளம்பல் உறுதி (Deed of Declaration), (ix) சீராக்கல் உறுதி (Deed of Rectification), (x) பிற்போடல் உறுதி (Deed of Postponement ), (xi) கைதுறத்தல் உறுதி (Deed of Renunciation), ( xii) விடுவித்தல் உறுதி (Deed of Release), (xiii) திருத்தல் உறுதி (Deed of Ratification ), (xiv) நம்பிக்கைப்பொறுப்பு உறுதி (Deed of Trust) மற்றும் ஆட்சி உறுதி (Deed of Prescription) போன்ற காணியின் உரித்துடன் தொடர்புபட்ட உறுதிகளையும் சாதனங்களையும் தயார்செய்து அவற்றை சான்றுப்படுத்தும்போதும் மேற்குறித்த புதிய திருத்தச் சட்டங்களில் உள்ள ஏற்பாடுகளை உரியமுறையிலும்

சரியானமுறையிலும் கடைப்பிடித்து அவற்றைச் சிறப்பான முறையில் செயற்படுத்துதல் வேண்டும்.

காணி அல்லது அசையா ஆதனம் ஒன்று தொடர்பான உரித்தினைப் பரிசீலிக்கும்போது குறித்த காணி அல்லது அசையா ஆதனம் தொடர்பான உறுதி பதிவு செய்யப்பட்டுள்ள இருமடித்தாளின் பதிவுகளில் (folio entries) பின்வரும் ஆவணங்களில் / விடயங்களில் ஒன்றோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவைகளோ, அதாவது i) ஈடு (Mortgage), ii) குத்தகை (Lease), iii) தடை எச்சரிக்கை (Caveat), iv) முடிவுறா வழக்கு (Lis pendens), v) கைப்பற்றுகை அறிவித்தல் (Sizure Notice) மற்றும் vi) முன்னுரிமை அறிவித்தல் (Priority Notice) என்பன தடைகளாக / வில்லங்கங்களாக (Encumbrances) காணப்படுமாயின் அவை தொடர்பில் நொத்தாரிசு ஒருவர் உரிய கவனம் செலுத்துவதுடன் மற்றும் அவை தொடர்பில் நன்கு பரிசீலனை மேற்கொண்டு குறித்த காணி அல்லது அசையா ஆதனம் தொடர்பான உரித்து தொடர்பில் அவர் சரியான தீரமானத்தை உரியமுறையில் மேற்கொண்டு தனது சேவைபெறுநர்களுக்கு (his clients) சிறப்பான சேவையை வழங்குதல் வேண்டும்.

ஆதனத்தின் மீதான சொத்தாண்மையை / சொத்துவத்தை கைமாற்றம் செய்தல் (transfer of ownership) மற்றும் ஆதனத்தின் மீதான சொத்தாண்மை / சொத்துவ உரித்து தவிர்ந்த ஏனைய உரித்துக்களை அல்லது உரிமைகளை மாற்றம் செய்தல் தொடர்பான செயற்பாடுகளுடன் தொழில்ரீதியாக தொடர்புபட்டவர்களாகக் காணப்படும் சட்டத்தரணிகள், பிரசித்த நொத்தாரிசுகள் மற்றும் வங்கிகள், ஏனைய நிறுவனங்களைச் சார்ந்தவர்கள் உட்பட சாதாரண பிரஜைகள் யாவரும் மேற்குறித்த

சட்டங்களில் உள்ளடக்கப்பட்டிருக்கும் அனைத்து விடயங்கள் பற்றியும் தெளிவான மற்றும் சரியான விளக்கத்தைக் கொண்டிருக்க வேண்டியது அவசியமானதாகும்.

மேற்குறித்த திருத்தச் சட்டங்களுக்கு உரியதான முதன்மைச் சட்டவாக்கங்களில் (principal enactments), ஆவனங்களைப் பதிவுசெய்தல் சட்டம் 1927ஆம் ஆண்டு காலப்பகுதியிலும் ஏனைய முதன்மைச் சட்டவாக்கங்கள் யாவும் 100 வருடங்களுக்கு முற்பட்ட காலப்பகுதியிலும் அறிமுகப்படுத்தப்பட்டவைகளாகக் காணப்படுகின்றன.

குறித்த முதன்மைச் சட்டவாக்கங்கள் தொடர்பில் காலத்துக்குக் காலம் பல திருத்தச் சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள போதிலும் அத்தகைய திருத்தச் சட்டவாக்கங்களில் பல்வேறு குறைபாடுகளும் (shortcomings) இடைவெளிகளும் (lacunas) காணப்பட்டன என்பது பொதுவான கருத்தாகும்.

மேலும், அத்தகைய குறைபாடுகளையும் (shortcomings) இடைவெளிகளையும் (lacunas) பயன்படுத்தியே பல்வேறு தரப்பினரும் காணி மற்றும் அசையா ஆதனக் கைமாற்றங்கள் / உரித்து மாற்றங்கள் நடைபெறும்போது பல்வேறு விதமான மோசடிகளில் ஈடுபடுகின்றார்கள் எனப் பலமான குற்றச்சாட்டுக்கள் கடந்தகாலங்களில் முன்வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கதாகும். எது எவ்வாறாக இருப்பினும் இவ்வாறாக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச் சாட்டுக்கள் முற்றுமுழுதாக மறுக்கப்பட முடியாதவை.

தற்போதைய நவீன இலத்திரனியல் தொழில்நுட்ப யுகத்தில் இடம்பெறக்கூடிய மோசடியான செயற்பாடுகளைத் தடுப்பதற்கு

முதன்மைச் சட்டவாக்கங்களிலும் அதன் பின்னர் அறிமுகப்படுத்தப்பட்ட அவற்றுக்கான திருத்தச் சட்டங்களிலும் காணப்படும் ஏற்பாடுகள் போதுமானவையாகக் காணப்படவில்லை எனும் கருத்தியிலின் அடிப்படையிலும் தோற்றம் பெற்றவையே மேற்குறித்த அண்மைக்காலத் திருத்தச் சட்டங்கள் என்று கூறினால் அது மிகையாகாது.

எதிர்காலத்தில் காணி மற்றும் அசையா ஆதனங்கள் தொடர்பான கைமாற்றங்கள் / உரித்து மாற்றங்கள் நடைபெறுகின்றபோது எத்தகைய தவறுகளோ அல்லது பிழைகளோ அல்லது மோசடிகளோ எந்தவிதத்திலும் இடம்பெற்றுவிடக்கூடாது என்பதை நோக்கமாகக் கொண்டு பல்வேறு புதிய மற்றும் கடுமையான நடைமுறை விடயங்கள் மேற்குறித்த திருத்தச் சட்டங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

நொத்தாரிசுகளாக தொழில்புரியும் ஒவ்வொருவரும் மேற்குறித்த நொத்தாரிசு (திருத்தச்) சட்டத்தின்[8] மூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய நடைமுறை விடயங்களைச் செயற் படுத்துவதை அச்சட்டம் கட்டாயமாக்கியுள்ளதுடன் அத்தகைய விடயங்களைச் செயற்படுத்தாது தவிர்ப்பது குற்றம் ஒன்றை புரிவதற்கு ஒப்பானது எனவும் அதில் விவரிக்கப்பட்டுள்ளதுடன் அத்தகைய குற்றத்தை புரிந்தவருக்கு எத்தகைய தண்டனை வழங்கப்படல் வேண்டும் என்பதையும் குறித்த சட்டம் மேலும் விவரமாக எடுத்துரைக்கின்றது.[9]

ஒவ்வொருவரும் மேற்குறித்த நொத்தாரிசு (திருத்தச்) சட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய நடைமுறை விடயங்களைப் பற்றிய

---

[8] Notaries (Amendment) Act No: 31 of 2022.

[9] Section: 34(1) (a) (b) & (c) of Notaries (Amendment) Act No: 31 of 2022.

தெளிவான விளக்கத்தை பெற்றிருப்பதன் மூலம் எதிர்காலத்தில் ஆதனத்தின் சொத்தாண்மை / சொத்துவ உரித்து மாற்றம் தொடர்பான செயற்பாடுகள் இடம்பெறும்போது ஏற்படக்கூடிய தவறுகள், பிழைகள், மற்றும் மோசடிகள் என்பனவற்றை இயன்றளவிற்கு தவிர்த்துக்கொள்ளமுடியும். மேலும், மேற்குறித்த திருத்தச் சட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதியநடைமுறை விடயங்களை சம்பந்தப்பட்ட திறத்தவர்கள் எந்தளவுக்கு நடைமுறைப் படுத்துகின்றார்கள் என்பதிலேயே அதன் வெற்றி தங்கியுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இளம் சட்டத்தரணிகள், சட்டக் கல்விகற்கும் மாணவர்கள், வங்கிகள் மற்றும் நிறுவனங்களைச் சார்ந்தவர்கள், மற்றும் சாதாரண பொதுமக்கள் உட்பட தமிழ் மொழி பேசும் சகலரும் இலகுவாக விளங்கிக்கொள்ளும் வகையில் "நொத்தாரிசு (திருத்தச்) சட்டத்தின் பிரதான சிறப்பம்சங்கள்" [SALIENT FEATURES OF NOTARIES (AMENDMENT) ACT] எனும் தலைப்பிலான இந்நூலில் மேற்குறித்த திருத்தச் சட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய நடைமுறை விடயங்கள் பற்றிச் சுருக்கமாக எடுத்துரைக்கப்படுகின்றது.

**இத்திருத்தச் சட்டத்தின் சிறப்பம்சங்கள் பற்றி சாதாரண பொதுமக்களும் இலகுவாக விளங்கிக்கொள்ளும் வகையில் ''கேள்வி – பதில்'' வடிவத்தில் இத்தால் சுருக்கமாக எடுத்துரைக்கப்படுகின்றது.**

# 2022 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க நொத்தாரிசு (திருத்தச்) சட்டத்தின் சிறப்பம்சங்கள்

## 1) சட்டத்தரணி ஒருவர் நொத்தாரிசாகவும் தொழில்புரிவதற்கு அனுமதிக்கப் படுவதற்கான தற்போதைய தேவைப்பாடுகள் எவை? - பிரிவு 3(1):

இத்திருத்தச் சட்டம் செயற்பாட்டுக்கு வருவதற்கு முன்னர் சட்டத்தரணியாக தொழில்புரிவதற்கு அனுமதிக்கப்பட்ட ஒருவர் நொத்தாரிசாக தொழில்புரிவதற்கான ஆணையை/ அனுமதியை (Warrant/ License) பெறுவதற்கு வேறு எத்தகைய மேலதிக தேவைப்பாடுகளும் இன்றி உரிய அமைச்சுக்கு நேரடியாக விண்ணப்பிக் கூடியதாக இருந்துள்ளது. ஆனால், தற்போது இந்த நிலைமையில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இத்திருத்தச் சட்டமானது, சட்டத்தரணியாக தொழில்புரிவதற்கு அனுமதிக்கப்பட்ட ஒருவர் நொத்தாரிசாகவும் தொழில்புரிவதற்கான

அனுமதியை வழங்கும் ஆணையை/அனுமதியை (Warrant/ License) பெறுவதற்கு அவர் பின்வரும் மேலதிக தேவைப்பாடுகளைப்[10] பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் என எடுத்துரைக்கின்றது:

i. சட்டக்கல்விப் பேரவையால் நடாத்தப்படும் உறுதிவரைதல் (COVEYANCING) பரீட்சையில் சித்தியடைந்துள்ளவரும் குறைந்தபட்சம் பத்து வருடங்கள் தொடர்ச்சியான காலப்பகுதியொன்றிற்கு நொத்தாரிசாக முனைப்பான தொழிலைப் புரிந்துவந்துள்ளவருமான அத்தகைய சட்டத்தரணியிடம் ஒருவருட காலப்பகுதிக்கு அவர் நொத்தாரிசு தொழிலைக் கற்றுக் கொள்ளல் வேண்டும்,

ii. அவர் நொத்தாரிசு தொழிலைக் கற்றுக்கொள்ளும் செயற்பாட்டினை மேற்கொள்ளும் போது நொத்தாரிசு கட்டளைச் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள விதிகள் மற்றும் வழிகாட்டி நெறிகள் பற்றியும், மற்றும் உறுதிவரைதல் செயன்முறைகள் தொடர்பிலும் முழுமையான பரீட்சயத்தை பெற்றுக்கொள்ளல் வேண்டும்,

iii. அவர் மேற்குறித்த விடயங்களை முறையாகக் கற்று அதில் நன்கு பரீட்சயம் பெற்றுள்ளார் என்பதை உறுதிப்படுத்தும் சான்றிதழை குறித்த சட்டத்தரணியிடம் பெற்றிருத்தல் வேண்டும்.

iv. குறித்த சான்றிதழ் இத்திருத்தச் சட்டத்தின் இரண்டாம் அட்டவணையில் விவரிக்கப் பட்டுள்ள 'படிவம்-ஆ1'[11] இனை ஒத்ததான / பிரதிபலிக்கும் வடிவத்தில் தயாரிக்கப் பட்டிருத்தல் வேண்டும்.

---

[10] Section 3 (1) of N.O.
[11] Form B1 of N.O.

சட்டத்தரணி ஒருவர் நொத்தாரிசு தொழிலை ஆரம்பிக்கின்றபோது நொத்தாரிசு கட்டளைச் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள விதிகள் மற்றும் வழிகாட்டி நெறிகள் என்பவை பற்றி போதிய அறிவைப் பெற்றிருத்தல் வேண்டும் என்பதையும், உறுதி வரைதல் மற்றும் அதனை சான்றுப்படுத்துதல் தொடர்பிலும் போதிய செயல்முறை அனுபவத்தையும் பெற்றிருத்தல் வேண்டும் என்பதையும் உறுதிப்படுத்தும் நோக்கமாகவே இத்திருத்தச் சட்டத்தில் மேற்குறித்தவாறாக புதிய விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

## 2) நொத்தாரிசாகத் தொழில் புரிவதற்குரிய தகைமையைப் பெற்றுள்ளவர்கள் அதற்கான அதிகாரம் அளிக்கின்ற ஆணையினை (warrant) பெறுவதற்கு முன் அவர்களால் பூர்த்தி செய்யப்படவேண்டிய தேவைப்பபாடுகள் எவை? பிரிவுகள்: 12 (1) (b) & 12 (2):

நொத்தாரிசு ஒருவராக அவரது கடமைகளை உரியமுறையிலும் விசுவாசமாகவும் நிறைவேற்றுவதை உறுதிப்படுத்துவதற்காக திரட்டு நிதியத்துக்கு வரவு வைக்கப்படும் பொருட்டு ரூபா பத்தாயிரம் (ரூபா: 10,000/=) பணத்தொகையொன்றை வைப்பிலிடுவதன் மூலம் மேல் நீதிமன்றத்தின் முன் அவர் முறியொன்றை (Bond) நிறைவேற்றுதல் வேண்டும்.

முன்பு ரூபா ஐந்தாயிரம் (ரூபா: 5,000/=) என நிர்ணயிக்கப் பட்டிருந்த குறித்த பிணைப்பணத் (security money) தொகையானது தற்பொழுது ரூபா பத்தாயிரம் (ரூபா: 10,000/= ) ஆக அதிகரிக்கப் பட்டுள்ளது.[12]

---

[12] Section 12 (1) (b) of N.O.

குறித்த நொத்தாரிசின் ஆணையில் (Warrant) குறித்துரைக்கப்பட்ட இடப்பரப்பின் மீது நியாயாதிக்கம் கொண்டுள்ள மேல் நீதிமன்ற நீதிபதியின் முன்னிலையில் மேற்குறித்த முறி (Bond) அவரால் கையொப்பமிடப்பட்டு நிறைவேற்றப்படுதல் வேண்டும்.[13]

## 3) நொத்தாரிசு ஆணையினை (Notarial Warrant) பெற்ற பின்பு நொத்தாரிசு தொழிலை ஆரம்பிக்கும் முன் நொத்தாரிசு ஒருவரால் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் யாவை? – பிரிவு: 3(2).

நொத்தாரிசாகச் செயற்படுவதற்கு அதிகாரமளிக்கின்ற ஆணையினை (warrant) பெற்றுக் கொண்ட நொத்தாரிசு ஒருவர் தான் வசிக்கும் நீதிநிர்வாக வலயத்தினுள் அவர் உறுதிவரைதல் பரீட்சையில் சித்தியடைந்த மொழியில் நொத்தாரிசாக தொழில்புரிவதற்கு உரித்துடையவர்.[14]

மேற்குறித்த ஆணையினை (warrant) பெற்றுக்கொண்ட ஒவ்வொரு நொத்தாரிசும் அவர் நொத்தாரிசாகத் தொழில்புரியும் செயற்பாட்டினை ஆரம்பிப்பதற்கு முன்னர் தான் நொத்தாரிசு தொழிலை ஆரம்பிக்கின்றமை பற்றிய விவரங்களைக் குறிப்பிட்டுக் கடிதம் ஒன்றினை தயாரித்து

[13] Section 12 (2) of N.O.
[14] Section: 3(1) of N.O.

அதனை உரிய காணிப்பதிவுக் காரியாலயத்தின் பதிவாளருக்குக் கையளித்தல் வேண்டும்.[15]

## 4). உறுதிக்கான தாள்களில் அல்லது படிவங்களில் உறுதிமுடிப்புக்காரர்களின் அல்லது சாட்சிகளின் கையொப்பங்கள் பெறப்படுவது தவிர்க்கப்படவேண்டிய சந்தர்ப்பங்கள் எவை? - பிரிவு:31 இன் விதி 3.

நொத்தாரிசின் முன்னிலையில் ஏதேனும் உறுதி அல்லது சாதனம் எதிர்காலத்தில் நிறைவேற்றப்படல் வேண்டும் எனும் நோக்கத்திற்காக அத்தகைய உறுதிக்கான அல்லது சாதனத்துக்கான மூலப் பிரதிக்குரிய (Original) அல்லது இணைப்பிரதிக்குரிய (Duplicate) அல்லது நொத்தாரிசின் பிரதிக்குரிய (Protocol) வெற்றுத் தாளில் (blank paper) அல்லது பூர்த்தி செய்யப்படாத படிவத்தில் (incomplete form) உறுதிமுடிப்புக்காரர்களின் அல்லது சாட்சிகளின் கையொப்பங்களையோ அல்லது விரல் அடையாளங்களையோ நொத்தாரிசு பெற்றுக்கொள்ளுதல் ஆகாது.

மேலும், நொத்தாரிசு உறுதிமுடிப்புக்காரர்களின் அல்லது சாட்சிகளின் கையொப்பங்களை அல்லது விரல் அடையாளங்களை அவ்வாறாக இடுவதற்கு அவர்களைத் தேவைப் படுத்துதலோ அல்லது அனுமதி அளித்தலோ ஆகாது.[16]

நொத்தாரிசு ஒருவரினால் வெற்றுத் தாள்களில் (blank papers) அல்லது பூர்த்தி செய்யப்படாத படிவங்களில்

[15] Section: 3(2) of N.O.
[16] Rule 3 in section 31 of N.O.

(incomplete forms) உறுதிமுடிப்புக்காரர்களாகக் கருதப்படு பவர்களின் கையொப்பங்கள் அல்லது விரலடையாளங்கள் பெறப்பட்டு, எதிர்காலத்தில் அத்தகைய தாள்களை (papers) அல்லது படிவங்களை (forms) பயன்படுத்தி அவரால் உறுதி அல்லது சாதனம் ஒன்று நிறைவேற்றப்பட்டு சான்றுப்படுத்படுமாயின் அத்தகைய செயற்பாட்டின் காரணமாக சட்டமீறல் இடம்பெறுவதுடன் மோசடியொன்றும் இடம் பெறுவதற்கான சாத்தியம் அதிகம் உள்ளதாகவும் கருதப் படமுடியும்.

நொத்தாரிசு ஒருவர் **பிரிவு 31 இன் விதி 3** இல் விபரிக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாகச் செயற்படுவாராயின் இத்திருத்தச்சட்டத்தின் **பிரிவு - 34 (1)(b)** இல் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் அவர் குற்றம் ஒன்றை புரிந்தவராகக் கருதப்படுவார். தற்போதைய திருத்தச்சட்டத்தில் உள்ள ஏற்பாடுகளின்[17] பிரகாரம் குறித்த நொத்தாரிசு அத்தகைய குற்றச்சாட்டுக்கு உள்ளாகும் சந்தர்ப்பத்தில், நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறையான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்புக்கு உள்ளாவார்.

## 5) நொத்தாரிசு ஒருவர் உறுதிகளையும் (Deeds) சாதனங்களையும் (Instruments) தயாரிப்பதற்கு எத்தகைய தாள்களைப் பயன்படுத்துதல் வேண்டும்? பிரிவு: 31 இன் விதி 3.

உறுதி அல்லது சாதனம் ஒன்று சான்றுப்படுத்துதலுக்கு (to be attested) தயாராக இருக்கும்போது அத்தகைய உறுதி அல்லது சாதனம்,

[17] Section 34 (1) (c) of N.O.

i) நிலைத்துநிற்கக்கூடிய காகிதத் (பார்ச்மன்ட்) தாள் **(**durable parchment paper**),** அல்லது

ii) நீலத் தாள் (blue sheet) மீது,

முழுமையாக எழுதப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு அல்லது அச்சிடப்பட்டு இருந்தாலொழிய, நொத்தாரிசு ஒருவர் அதனை சான்றுப்படுத்துதல் ஆகாது.[18]

நொத்தாரிசு முன்னிலையில் நிறைவேற்றப்படும் உறுதிகள் அல்லது சாதனங்கள் விரைவில் சேதமடையாமல் நீண்ட காலத்திற்கு நிலைத்து நிற்கக்கூடியவாறாக இருத்தல் வேண்டும் என்பதனை நோக்கமாகக்கொண்டு மேற்குறிப்பிடப்பட்ட வகையான தாள்களில் அவை தயாரிக்கப்படல் வேண்டும் என்ற இத்தகைய புதிய ஏற்பாடுகள் குறித்த திருத்தச் சட்டத்தில் வெளிப்படையாகக் கொண்டுவரப்பட்டுள்ளமை அவதானிக்கத்தக்கது.

**6) உறுதிகள் மற்றும் சாதனங்கள் பிரிக்கப்பட்ட தனித்தனியான தாள்களில் தயாரிக்கப்பட முடியுமா? பிரிவு: 31 இன் விதிகள் 5 (a) & (b).**

பொதுவாக நொத்தாரிசு ஒருவரால் எதாவது உறுதியானது ஒரு முழுமையான பிரிக்கப்படாத பார்ச்மன்ட் தாளில் (parchment paper) அல்லது நீலத் தாளில் (blue sheet) வரைவு செய்யப்பட்டு / தயாரிக்கப்பட்டு அவரால் அத்தாட்சிப்படுத்தலாம்.[19]

ஆனாலும், நொத்தாரிசு ஒருவர் இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட வெவ்வேறாகத் தனித்தனியாகப் பிரிக்கப்பட்ட

---

[18] Rule 3 in section 31 of N.O.
[19] Rule 5 in section 31 of N.O.

தாள்களைப் பயன்படுத்துவாராயின் அவர் பின்வரும் விடயங்களைச் செயற்படுத்துதல் வேண்டும்:[20]

i. குறித்த தாள்களின் ஒவ்வொரு பக்கத்திலும் இலக்கம் இடப்படுதல் வேண்டும்;

ii. அத்தகைய ஒவ்வொரு தாளின்மீதும் நொத்தாரிசின் கையொப்பம் இடப்படுதல் வேண்டும்;

iii. அத்தகைய ஒவ்வொருதாளிற்கும் உறுதிமுடிப்புக்காரர்கள் ஒவ்வொருவரதும் கையொப்பங்களும் விரல் அடையாள--ங்களும் பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்;

iv. உறுதிமுடிப்புக்காரரது விரல் அடையாளமானது அவரது கையொப்பத்துக்கு மேல் அல்லது அதற்கருகில் பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

விடயத்திற்கேற்ப அற்றோணித் தத்துவகாரர் (Power of Attorney holder) அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றின் அதிகாரமளிக்கப்பட்ட ஆள் (authorized person of the incorporated body) உறுதிமுடிப்புக்காரராகக் கருதப்படுதல் வேண்டும் என்பதையும் இத்திருத்தச் சட்டம் எடுத்துரைக்கின்றது.[21]

## 7) உறுதிகள் மற்றும் சாதனங்களுக்கான முத்திரைத் தீர்வைக் கட்டணம் எங்கே எவ்வாறு செலுத்தப்படுதல் வேண்டும்? பிரிவு: 31இன் விதிகள் 6 & 7A (a) (b) & (c).

[20] Rule 5(b) (iii) in section 31 of N.O.
[21] Ibid.

உரிய முத்திரைத் தீர்வைக் கட்டணம் வழங்கப்படுகின்றது என்பதற்கான ஓர் உறுதிப்பாட்டை நொத்தாரிசு ஒருவர் உறுதிமுடிப்புக்காரரிடம் இருந்து பெற்றிருந்தாலொழிய அவர் ஏதேனும் உறுதியை அல்லது சாதனத்தை சான்றுப்படுத்துதல் ஆகாது.[22]

ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் எழுதி நிறைவேற்றப்பட்ட எந்தகைய கைமாற்றம் (Transfer), நன்கொடை(Gift), பரிமாற்றம் (Exchange) அல்லது வேறு எத்தகைய உரித்து மாற்றம் தொடர்பான எல்லா உறுதிகளுக்கும் அல்லது சாதனங்களுக்கும் எந்தளவு தொகை முத்திரைத் தீர்வையாகச் செலுத்தப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்படுகின்றதோ அத்தகைய முத்திரைத் தீர்வை தொகையை அரச வங்கியொன்றில் உரிய அரச திணைக்களத்தின் கணக்கில் வரவு வைக்கும்வகையில் நொத்தாரிசினால் செலுத்தப்படுதல் வேண்டும்.[23]

அத்தகைய முத்திரைத் தீர்வைத் தொகை உரிய திணைக்களத்திற்கு செலுத்தப்பட்டுள்ளது என்பதற்கான சான்றாக, இயைபான அரச வங்கியிலிருந்து நொத்தாரிசினால் பெறப்பட்ட மூலப் பற்றுச்சீட்டு உறுதியின் அல்லது சாதனத்தின் இணைப்பிரதிக்கு ஒட்டப்படுதல் வேண்டும்.[24] அத்தகைய பற்றுச்சீட்டின் பிரதிகள் குறித்த உறுதி அல்லது சாதனத்தின் மூலப் பிரதி மற்றும் நொத்தாரிசின் பிரதி என்பவற்றில் ஒட்டப்படுதல் வேண்டும்[25].

குறித்த உறுதி அல்லது சாதனம் நிறைவேற்றப்பட்டதில் இருந்து எத்தனை நாட்களுக்குள் உரிய முத்திரைத் கட்டணம் (stamp duty) உரிய திணைக்களத்திற்கு

[22] Rule 6 in section 31 of N.O.
[23] Rule 7A (a) in section 31 of N.O.
[24] Rule 7A (b) in section 31 of N.O.
[25] Rule 7A (c) in section 31 of N.O.

அல்லது உரிய திணைக் களத்தின் கணக்கில் வரவு வைப்பதற்காக அரச வங்கியில் செலுத்தப்படல் வேண்டும் என்பது பற்றி குறித்த திருத்தச் சட்டத்தில் வெளிப்படையான ஏற்பாடுகள் எதுவும் முன்வைக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## 8) நொத்தாரிசு ஒருவர், உறுதியை அல்லது சாதனத்தை அல்லது அத்தகைய ஆவணம் ஒன்றை எத்தகைய சந்தரப்பங்களில், சான்றுப்படுத்த முடியும்? -பிரிவு: 31இன் விதி 9.

முதன்மைச் சட்டவாக்கத்தில் (principal enactment) ஏற்கனவே காணப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் "ஏதேனும் உறுதியை அல்லது சாதனத்தை நிறைவேற்றுகின்ற திறத்தவர்களை அல்லது அவ்வாறாக நிறைவேற்றுகின்ற திறத்தவர்களை நன்கு அறிந்துள்ள அதற்கான அத்தாட்சிப்படுத்தும் சாட்சிகளில் இருவரை குறித்த நொத்தாரிசு நன்கு அறிந்திருந்தாலொழிய அவர் அதனை சான்றுப்படுத்துதல் ஆகாது" என விவரிக்கப்பட்டு இருந்துள்ளது.

எனவே இதன் காரணமாக நொத்தாரிசு ஒருவர் குறித்த உறுதியை அல்லது சாதனத்தை நிறைவேற்றுகின்ற திறத்தவர்களை அல்லது அவ்வாறாக நிறைவேற்றுகின்ற திறத்தவர்களை நன்கு அறிந்துள்ள சாட்சிகளில் இருவரை அவர் சுயமாக நன்கு அறிந்திருக்காவிட்டால் அத்தகைய உறுதியை அல்லது சாதனத்தை சான்றுப்படுத்த முடியாத நிலைமையே முன்பு காணப்பட்டது.

தற்போதைய திருத்தச் சட்டத்தின் பிரகாரம் மேற்குறித்த முன்னைய ஏற்பாடுகள் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக புதிய

ஏற்பாடுகள் உட்புகுத்தப்பட்டுள்ளதன் காரணமாக மேற்குறித்த முன்னைய நிலைமையில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தற்போதைய புதிய ஏற்பாடுகளின் பிரகாரம் பின்வரும் விடயங்களில் நொத்தாரிசு ஒருவர் கவனத்தைச் செலுத்துதல் வேண்டும்:

i) அவர் குறித்த உறுதியை அல்லது சாதனத்தை நிறைவேற்றுகின்ற திறத்தவர்களில் ஒருவரை நன்கு அறிந்திருத்தல் வேண்டும், அல்லது

ii) அவர் குறித்த உறுதியை அல்லது சாதனத்தை நிறைவேற்றுகின்ற திறத்தவர்களை நன்கு அறிந்துள்ள சாட்சிகளில் இருவரையாவது நன்கு அறிந்திருத்தல் வேண்டும், அல்லது

iii) அவர் அத்தகைய உறுதி அல்லது சாதன முடிப்புக்காரர்களின் தேசிய அடையாள அட்டை (National Identity Card), கடவுச் சீட்டின் சுயவிவரப்பக்கம் (Bio-page of the Passport) அல்லது சாரதி உரிமம் (Drinving License) என்பவற்றை நன்கு பரிசோதிப்பதன் மூலம் அத்தகைய உறுதி முடிப்புக்காரர்களை அல்லது சாதன முடிப்புக்காரர்களை நன்கு அடையாளம் கண்டுகொள்ளுதல் வேண்டும்.[26]

எனவே மேற்குறித்த மூன்று நிலைமைகளில் எதாவது ஒன்றாவது காணப்படும் சந்தர்ப்பத்திலேயே நொத்தாரிசு ஒருவர் குறித்த உறுதியை அல்லது சாதனத்தை சான்றுப்படுத்துதல் முடியும் என்பது கவனிக்கத்தக்கதாகும்.

---

[26] Rule 9 in section 31 of N.O.

மேற்குறித்த புதிய ஏற்பாடானது நொத்தாரிசு ஒருவருக்கு குறித்த உறுதியை அல்லது சாதனத்தை சான்றுப்படுத்துவதற்கான சந்தர்ப்பம் கிடைக்கப்பெறுவதை சட்டரீதியாக இலகுபடுத்தியுள்ளது என்பது அவதானிக்கத்தக்கதாகும்.

## 9) நொத்தாரிசு ஒருவர், உறுதிமுடிக்காரர்கள் மற்றும் சாட்சிகள் ஆகியோர் அடையாளம் காணப்பட்ட விபரம் தொடர்பில், தனது சான்றுப்படுத்துதலில் எவ்வாறாக விவரித்தல் வேண்டும்? பிரிவு: 31இன் விதி 9.

உறுதியினை அல்லது சாதனத்தினை நிறைவேற்றுபவர்களை (executants) நொத்தாரிசு சுயமாக அறிந்துள்ளாரா என்பதையும் அல்லது அவர் தேசிய அடையாள அட்டையை, கடவுச்சீட்டின் சுயவிபரப் பக்கத்தை அல்லது சாரதி உரிமத்தை பரிசோதித்தன் மூலம் அடையாளம் கண்டுள்ளாரா என்பதையும் நொத்தாரிசு தனது அத்தாட்சிப்படுத்துதல் பகுதியில் **(**in his attestation) தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

மேலும் குறித்த நொத்தாரிசு, உறுதியினை அல்லது சாதனத்தினை நிறைவேற்றுபவர்களில் (executants) யார் ஒருவரை அவர் அறிந்துள்ளார் அல்லது குறித்த சாதனத்தினை நிறைவேற்று பவர்களில் எவர் ஒருவரையாவது நன்கு அறிந்துள்ள சாட்சிகளில் யார் இருவரை அவர் அறிந்துள்ளார் என்பதையும் நொத்தாரிசு தனது அத்தாட்சிப்படுத்தலில் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.[27]

---

[27] Rule 20(b) in section 31of N.O.

## 10) நொத்தாரிசு ஒருவர், உறுதியை அல்லது சாதனத்தை நிறைவேற்றுபவர்களினதும் சாட்சிகளினதும் முழுப்பெயர்களை எவ்வாறாக நிச்சயப்படுத்திக்கொள்ளுதல் வேண்டும்? - பிரிவு: 31இன் விதி 14.

நொத்தாரிசு ஒருவர், குறித்த உறுதியொன்றினை அல்லது சாதனமொன்றினை நிறைவேற்று பவர்களினதும் அல்லது அதற்கான சாட்சிகளினதும் கையொப்பங்களை அல்லது விரல் அடையாளங்களை அத்தகைய உறுதியில் அல்லது சாதனத்தில் இடுவதற்கு முன்னர் அவர்களது முழுப்பெயர்களைத் தெளிவாக நிச்சயப்படுத்திக்கொள்ளுதல் வேண்டும்.

மேலும் அத்தகைய உறுதியொன்றினை அல்லது சாதனமொன்றினை நிறைவேற்றுபவர்களின் அல்லது அதன் சாட்சிக்காரர்களின் பெயர்கள், அத்தகைய நிறைவேற்றுபவர்களின் அல்லது சாட்சிக்காரர்களின் அடையாளங்காண் ஆவணங்களில் கொடுக்கப்பட்ட பெயர்களிலிருந்து வித்தியாசமானதாக இருப்பின், அத்தகைய உறுதியின் அல்லது சாதனத்தினது அவரது அத்தாட்சிப்படுத்தும் பகுதியில், அத்தகைய நிறைவேற்றுபவர்களை அல்லது சாட்சிகளை அத்தகைய அடையாளங்காண் ஆவணங்களில் விவரிக்கப்பட்டுள்ள முழுப்பெயர்களினாலும் அத்துடன் கையொப்பங்களில் எழுதப்பட்டுள்ள பெயர்களினாலும் தெளிவாக விவரித்தல் வேண்டும்.[28]

## 11) உறுதியை அல்லது சாதனத்தை நிறைவேற்றுபவர்களில் ஒருவர் கூட்டிணைக்கப்பட்ட குழுமமாக இருப்பின், எத்தகைய நடவடிக்கைகளைப்

---

[28] Rule 14 in section 31 of N.O.

**பின்பற்றுதல் வேண்டும்? - பிரிவு: 31இன் விதிகள் 15A (1) (b) in section 31:**

காணி அல்லது அசையா ஆதனம் தொடர்பான உறுதி அல்லது சாதனம் ஒன்றின் ஒருதிறத்தவராக கூட்டிணைக்கப்பட்ட குழுமமாக (corporate body) இருப்பின், அத்தகைய கூட்டிணைப்பை தாபிக்கும் சான்றிதழின் (the certificate of incorporation) உறுதிப்படுத்தப்பட்ட பிரதி ஒன்றையும் அல்லது அத்தகைய கூட்டிணைப்பின் உருவாக்கத்தை தாபிக்கின்ற வேறு சாதனத்தின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதி ஒன்றையும் பணிப்பாளர் சபையின் விபரங்களையும் நொத்தாரிசு தன்னகத்தே வைத்திருத்தல் வேண்டும்.[29]

உறுதிமுடிப்புக்காரர்களாகக் கையொப்பமிடும் ஒருவர் கூட்டிணைக்கப்பட்ட குழுமம் ஒன்றினது சபையின் பணிப்பாளர்களில் (board of directors of the corporate body) ஒருவராக அல்லது அதனது அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவராக (an authorized person) இருக்குமிடத்து அத்தகைய ஆள் உறுதியின் அல்லது சாதனத்தின் மூலப் பிரதியில், இணைப் பிரதியில் மற்றும் நொத்தாரிசின் பிரதியில் தனது கையொப்பத்தை இடுதல் வேண்டும்.[30]

மேலும் குறித்த கையொப்பத்துக்கு மேல் அல்லது அதற்கருகில் அவரது பெருவிரல் அடையாளத்தையும் இடுதல் வேண்டும். பெருவிரல் அடையாளத்தை இடுவதற்கு முடியாதுவிடின் ஏதாவதொரு கைவிரல் அடையாளத்தை அல்லது கால் விரல் அடையாளத்தை இடுதல் வேண்டும்.[31] இதற்கு மேலதிகமாக, கூட்டிணைக்கப்பட்ட குழுவின்

---

[29] Rule 17(d) in section 31of N.O.
[30] Rule 15A (1) (b) in section 31of N.O.
[31] Rule 15A (1) (b) in section 31.

உத்தியோக இலச்சினையும் இடப்படுதல் வேண்டும் (affix the seal of the corporate body).

## 12) உறுதிமுடிப்புக்காரர்களில் ஒருவர் தத்துவம் வழங்கப்பட்டவராக / அற்றோணித் தத்துவக்காரராக இருப்பின் எத்தகைய நடவடிக்கைகளைப் பின்பற்றுதல் வேண்டும்? - பிரிவு: 31இன் விதிகள் 15A (1) (c) & விதி 30.

காணி அல்லது அசையா ஆதனம் தொடர்பான உறுதியினை அல்லது சாதனத்தினை நிறைவேற்றுபவர்களில் ஒருவர் தத்துவம் வழங்கப்பட்டவாராக / அற்றோணித் தத்துவகாரராக (Power of Attorney holder) இருப்பின், பதிவாளர் தலைமையதிபதியிடமிருந்து (Registrar General) குறித்த தத்துவப்பத்திரத்தின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியொன்றை (a certified copy of the Power of Attorney) குறித்த உறுதி அல்லது சாதனம் நிறைவேற்றப்பவடுதற்கு முன்னர் குறித்த நொத்தாரிசு பெறுதல் வேண்டும்.[32]

மேலும் பதிவாளர் தலைமையதிபதியிடமிருந்து பெறப்பட்ட குறித்த தத்துவப்பத்திரத்தினது உறுதிப்படுத்தப்பட்ட பிரதியை (a certified copy of the Power of Attorney) உறுதியின் அல்லது சாதனத்தின் மூலப் பிரதிக்கு இணைத்தல் வேண்டும் என்பதுடன் அதன் உண்மைப் பிரதிகளை இணைப்பிரதிக்கும் மற்றும் நொத்தாரிசின் பிரதிக்கும் இணைத்தல் வேண்டும்.[33]

குறித்த தத்துவம் வழங்கப்பட்டவர் / அற்றோணித் தத்துவகாரர் (Power of Attorney Hodler) குறித்த

[32] Rule 30 in section 31. and31of N.O.
[33] Ibid.

தத்துவப்பத்திரம் (Power of Attorney) உண்மையானது எனவும், அது இதுவரையில் மீளப்பெறப் படவில்லை எனவும் அல்லது இரத்துச்செய்யப்படவில்லை (has not been revoked or cancelled) எனவும், தற்போதும் அது வலுவில் உள்ளது எனவும், குறித்த தத்துவப்பத்திரம் ஊடாக தத்துவத்தை வழங்கியவர் (Grantor) தற்போதும் உயிரோடு இருக்கின்றார் எனவும் வெளிப்படுத்தி அவற்றை உறுதிப்படுத்துவதான சத்தியக்கடதாசி (affidavit) ஒன்றையும் குறித்த உறுதியை அல்லது சாதனத்தை சான்றுப்படுத்தும் நொத்தாரிசிற்குச் சமா்ப்பித்தல் வேண்டும்.[34]

மேலும் குறித்த தத்துவப்பத்திரம் (Power of Attorney) ஊடாக தத்துவம் வழங்கியவரதும் (Grantor) தத்துவம் வழங்கப்பட்டவரதும் (Grantee) தேசிய அடையாள அட்டை (National Identity Card) அல்லது கடவுச்சீட்டு (Passport) அல்லது சாரதி உரிமம் (Driving License) என்பவற்றின் பிரதிகளைப் பெற்று அவற்றை நொத்தாரிசின் பிரதியுடன் இணைத்து வைத்திருத்தலும் வேண்டும்.

## 13) உறுதி முடிப்புக்காரர்களில் ஒருவர் பராயமடையாதவராக இருப்பின் எத்தகைய நடவடிக்கைகளைப் பின்பற்றுதல் வேண்டும்? - பிரிவு: 31இன் விதிகள் 15A (1) (d).

[34] Rule 15A (1) (c) in section 31.

உறுதிமுடிப்புக்காரர்களில் ஒருவர் அல்லது சாதனமுடிப்புக்காரர்களில் ஒருவர் பராயமடையாதவராக இருப்பின் விடயத்துக்கு ஏற்றவாறு, கைமாற்றப்படுபவர் (transferee) சார்பாக செயற்படுவதற்கு சட்டப் பாதுகாவலர் அல்லது பாதுகாவலர் ஒருவர் அதிகாரமளிக்கப்பட்டவராகக் கருதப்படுதல் வேண்டும் (the legal guardian or guardian, as the case may be, shall be a competent person).

எனவே குறித்த சட்டப்பாதுகாவலர் அல்லது பாதுகாவலர் அதிகாரமளிக்கப்பட்ட ஆள் என்ற ரீதியில் உறுதி ஒன்று நிறைவேற்றப்படும் போது குறித்த உறுதியில் பராயமடையாதவர் சார்பாக / கைமாற்றப்படுபவர் சார்பாக (on behalf of the transferee) அவரது கையொப்பத்தையும் விரல் அடையாளத்தையும் இடுவதற்கு உரித்துடையவர்.[35]

எனவே மேற்குறித்த ஏற்பாடானது பராயமடையாதவர் கைமாற்றப்படுபவராக (transferee) இருக்கும் சந்தர்ப்பத்தில் மட்டுமே பராயமடையாதவர் சார்பாக சட்டப் பாதுகாவலர் அல்லது பாதுகாவலர் என்ற அந்தஸ்தில் அவர் குறித்த உறுதியில் தனது கையொப்பத்தையும் விரல் அடையாளத்தையும் இடுவதற்கான உரிமையை வழங்குகின்றது என்பது இங்கு கவனிக்கத் தக்கதாகும்.

## 14) உறுதியின் அல்லது சாதனத்தின் ஆதன அட்டவணையில் ஆதனம் அமைந்திருக்கும் வீதியின் பெயர் (Name of the Road) மற்றும் ஆதனத்தினது மதிப்பீட்டு இலக்கம் (Assessment Number) என்பவை கட்டாயம் விவரிக்கப்படுதல் வேண்டுமா? - பிரிவு: 31இன் விதி 16 (a).

---

[35] Rule 15A (1) (d) in section 31 of N.O.

ஆதனம் அமைந்திருக்கும் வீதியின் பெயர் (name of the Road) மற்றும் ஆதனத்தினது மதிப்பீட்டு இலக்கம் (Assessment number) எதுவும் இருப்பின் குறித்த உறுதியின் அல்லது சாதனத்தின் ஆதன அட்டவணையில் அவை பற்றி குறிப்பிடப்படுதல் வேண்டும் என்பதுடன், கூட்டாட்சி ஆதனம் ஒன்றின் (a condominium property) விடயத்தில் கூட்டாட்சி சிறுகூறு (condominium parcel) அடையாளம் காணப்படமுடியுமாக உள்ளவிடத்து அத்தகைய கூட்டாட்சி சிறுகூறு மற்றும் வேறு ஆக்கக்கூறு பற்றியதுமான விவரணமொன்றையும், அத்துடன் கூட்டாட்சி சிறுகூறொன்று அடையாளங்காணப்பட முடியாததாக உள்ளவிடத்து, முழுக்காணி (whole land) அல்லது காணிச் சிறுகூறு (land parcel) பற்றியதுமான விவரணமொன்றையும் குறிப்பிடுதல் வேண்டும்.[36]

ஏற்கனவே உள்ள நடைமுறைகளின் பிரகாரம் உறுதியில் அல்லது சாதனத்தில் ஆதனம் பற்றி விவரிக்கையில் குறித்த ஆதனம் அமைந்துள்ள கிராமசேவை உத்தியோகத்தரின் பிரிவு (Grama Sevaka Officer's Division) மற்றும் உள்ளூராட்சிமன்ற நிர்வாகப் பிரிவு (Adminsitrative Division of Local Authority) என்பவை பற்றி கட்டாயம் குறிப்பிடப்படுதல் வேண்டும்

**15) நொத்தாரிசு ஒருவர், சொத்தாண்மை (ownership) மற்றும் பதிவுசெய்யப்பட்டுள்ள வில்லங்கங்கள் / தடைகள் (encumbrances) தொடர்பான இறுதிப்பதிவுகளை உள்ளடக்கிய இருமடித் தாளை, குறித்த உறுதி அல்லது சாதனம் ஒன்றை சான்றுப்படுத்துவதற்கு முன்பு, அவர்**

---

[36] Rule 16 (a) in section 31 of N.O.

**பெற்றுக்கொள்ளுதல் வேண்டும் என்பது தற்போது கட்டாயமாக்கப்பட்டுள்ளதா? – பிரிவு: 31இன் விதிகள் 17 (b) (i) & (ii).**

ஆம். காணியொன்றின் அல்லது அசையா ஆதனமொன்றின் மாற்றம் / கைமாற்றம் இடம்பெறுவதற்கு முன்னதாக குறித்த காணியொன்றின் அல்லது அசையா ஆதனமொன்றின் சொத்தாண்மை / சொத்துவம் தொடர்பான உறுதி அல்லது சாதனம் பதிவு செய்யப்பட்டுள்ள இருமடித்தாளில் பதிவுசெய்யப்பட்டுள்ள தடைகள் / வில்லங்கங்கள் பற்றிய இறுதிப் பதிவுகளைக் கொண்டுள்ள காணிப் பதிவுப் புத்தகத்தினது உறுதிப்படுத்தப்பட்ட இருமடித்தாளை உரிய காணிப்பதிவுக் காரியாலயத்தில் இருந்து பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.[37]

முதன்மைச் சட்டவாக்கத்தில் (Principal enactment) ஏற்கனவே காணப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் காணியின் அல்லது அசையாத ஆதனத்தின் சொத்தாண்மை / சொத்துவம் (ownership) மற்றும் பதிவுசெய்யப்பட்டுள்ள தடைகள் / வில்லங்கங்கள் (registered encumbrances) தொடர்பான முன்னைய பதிவுகளைப் பற்றிய தேடுதலும் பரிசீலித்தலும் (search and examination) மேற்கொள்ளப்படல் வேண்டும் என்பது கட்டாயமாக்கப்பட்டிருக்கவில்லை[38].

எனவே நொத்தாரிசு ஒருவரினால் முன்னைய பதிவுகளைப் பற்றிய தேடுதலும் பரிசீலித்தலும் இன்றி உறுதியை அல்லது சாதனத்தை சான்றுப்படுத்தக்கூடிய சந்தர்ப்பங்கள் ஏற்கனவே காணப்பட்டன. அத்தகைய சந்தர்ப்பங்களில் உறுதியின் அல்லது சாதனத்தின் முன்பக்கத்தினது ஆரம்பப்

[37] Rule 17 (b) (i) in section 31 of N.O.

[38] Section 17 (now repealed).

பகுதியில் "உரித்து பற்றிய தேடுதலும் பரிசீலித்தலும் தவிர்க்கப்பட்டுள்ளது" (search and examination of title dispensed with) எனும் வாசகத்தை நொத்தாரிசுமார் குறிப்பிடுவதுண்டு.

தற்போதைய திருத்தச் சட்டத்தில் உள்ள ஏற்பாடுகளின்[39] பிரகாரம் நொத்தாரிசு ஒருவர் காணியொன்றின் அல்லது அசையாத ஆதனமொன்றின் சொத்தாண்மை **/** சொத்துவம் (ownership) மற்றும் பதிவுசெய்யப்பட்டுள்ள தடைகள் **/** வில்லங்கங்கள் (registered encumbrances) தொடர்பிலான இறுதிப் பதிவுகளைபற்றிய தேடுதலையும் பரிசீலித்தலையும் மேற்கொள்ள வேண்டியது கட்டாயமாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

அதாவது, குறித்த காணி அல்லது ஆதனம் தொடர்பான ஆவணங்களினது இறுதிப் பதிவுகளைக் கொண்டுள்ள பதிவேட்டினது உறுதிப்படுத்தப்பட்ட இருமடித்தாளை **(**the certified extract of the folio sheet containing the last entries) உரிய காணிப்பதிவுக் காரியாலயத்தில் இருந்து குறித்த காணியின் அல்லது அசையாத ஆதனத்தின் உரித்து மாற்றம் **/** கைமாற்றம் இடம்பெறுவதற்கு முன்னதாக பெற்றுக் கொள்ளுதல் வேண்டும் என ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதன் மூலம் இறுதிப் பதிவுகளைபற்றிய தேடுதலும் பரிசீலித்தலும் தற்போது கட்டாயமாக்கப்பட்டுள்ளமை அவதானிக்கத் தக்கதாகும்.

ஆனால் நடைமுறை அனுபவத்தின் பிரகாரம் உரித்து மாற்றம் / கைமாற்றம் செய்யப்படவுள்ள காணி அல்லது ஆதனம்

---

[39] Rule 17(b) (i) in section 31 of N.O.

தொடர்பான ஆவணங்களினது, கடந்த 30 வருடங்களுக்குக் குறையாத காலப்பகுதிக்கான, முன்னைய பதிவுகளைக் கொண்டுள்ள பதிவுப்புத்தகத்தின் உறுதிப்படுத்தப் பட்ட இருமடித் தாள்களை உரிய காணிப்பதிவுக் காரியாலயத்தில் இருந்து பெற்று அவற்றை பரிசீலனை செய்து சொத்தாண்மை / சொத்துவ உரித்து (title of ownership) மற்றும் பதிவு செய்யப்பட்டுள்ள தடைகள் / வில்லங்கங்கள் (registered encumbrances) பற்றி நொத்தாரிசினால் தீர்மானம் மேற்கொள்ளப்படுதல் சிறப்பானதாகும்.

தற்போது வங்கிகளால் தமது வாடிக்கையாளர்களுக்கு வழங்குவதற்கு உத்தேசிக்கப்படும் கடன் தொகையானது, வாடிக்கையாளர்களால் மீளச் செலுத்தப்படும் என்பதை உத்தரவாதப்படுத்தும் நோக்கத்துக்காக வங்கிகளது வாடிக்கையாளர்களால் பிணையாக (Security) வழங்குவதற்கு உத்தேசிக்கப்படும் காணி அல்லது அசையா ஆதனம் தொடர்பான சொத்தாண்மை / சொத்துவ உரித்து (title of ownership) மற்றும் பதிவுசெய்யப்பட்டுள்ள தடைகள் / வில்லங்கங்கள் (registered encumbrances) உள்ளடங்கலான உரித்து அறிக்கையை (Title Report) கடந்த 15 வருடங்களுக்குரிய முன்னைய பதிவுகளை உள்ளடக்கியதாகத் தயாரிக்கும்படி வங்கிகளுக்காகச் செயற்படும் சட்டத்தரணிகள் வேண்டப்படுகின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் சம்பந்தப்பட்ட காணி அல்லது ஆதனம் தொடர்பில் கடைசியாக இடம்பெற்றுள்ள கைமாற்றத்துடன் தொடர்புபட்ட இறுதிப் பதிவுகள் பதிவுசெய்யப்பட்டுள்ள இருமடித்தாளுக்குரிய முற்பதிவு இலக்கங்களை (Prior Registration Numbers) உறுதியின் அல்லது சாதனத்தின் முதல்

பக்கத்தின் ஆரம்பப் பகுதியில் குறிப்பிடுதல் வேண்டும் என்பது நொத்தாரிசின் கட்டாய கடமையாகும்.[40]

நொத்தாரிசு ஒருவர் **பிரிவு-31** இல் உள்ள விதி **17(b) (i) & (ii)** என்பவற்றில் விவரிக்கப்பட்டுள்ளவாறு செயற்படத் தவறுவாராயின் அவர் குற்றம் ஒன்றை புரிந்தவராகக் கருதப்படுவார். தற்போதைய திருத்தச்சட்டத்தில் உள்ள ஏற்பாடுகளின்[41] பிரகாரம் அத்தகைய சந்தர்ப்பத்தில், நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறையான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்டபின் அவருக்கு ஏற்படக்கூடிய ஏதேனும் குடியியல் பொறுப்புடன் மேலதிகமாக ரூபா ஐம்பதாயிரத்துக்கு (ரூபா 50,000/=) மேற்படாத தண்டம் (a fine not exceeding fifty thousand rupees, in addition to any civil liability he may incur thereby) என்பவை தண்டனையாக விதிக்கப்படும்.

## 16) நம்பிக்கைப்பொறுப்பு தொடர்பான உறுதி தொடர்பில், எத்தகைய நடவடிக்கைகளைப் பின்பற்றுதல் வேண்டும்? பிரிவு: 31இன் விதி 17 (e).

நொத்தாரிசு ஒருவர் அத்தாட்சிப்படுத்தும் உறுதி அல்லது சாதனம் ஒரு நம்பிக்கைப்பொறுப்பு தொடர்பானதாக (deed or instrument in respect to a Trust) இருப்பின் குறித்த நம்பிக்கைப் பொறுப்பின் கீழ் செயல்படும் நம்பிக்கைப்பொறுப்பாளர்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கங்கள் என்பவற்றை குறித்த உறுதி அல்லது சாதனத்தில் மிகவும் தெளிவாகவும் விவரமாகவும் குறிப்பிடுதல் வேண்டும்.

---

[40] Rule 17(b) (ii) in section 31 of N.O.
[41] Section 34 (1) (c) of N.O.

மேலும் எந்த ஏற்பாட்டின் கீழ் குறித்த உறுதியை / சாதனத்தை நிறைவேற்றுவதற்கு அவர்கள் அதிகாரமளிக்கப்பட்டுள்ளார்கள் என்பதையும் நொத்தாரிசு அவரது சான்றுப்படுத்தலில் (in his attestation) விவரமாகக் குறிப்பிட்டு அத்தகைய நம்பிக்கைபொறுப்பு உறுதியின் ஒரு பிரதியை அவர் தன்வசம் வைத்திருத்தலும் வேண்டும்.[42]

## 17) உறுதிமுடிப்புக்காரர்களின் அல்லது சாதன முடிப்புக்காரர்களின் உறுதிப் படுத்தப்பட்ட புகைப்படங்கள் உறுதியின் அல்லது சாதனத்தின் மூலப்பிரதியில் ஒட்டப்படுதல் வேண்டும் என்பது தற்போது கட்டாயமாக்கப்பட்டுள்ளதா? பிரிவு: 31இன் விதி 17(b)(iii).

ஆம். கைமாற்றல் உறுதியின் / அறுதி உறுதியின் (Deed of Transfer) அல்லது நன்கொடை உறுதியின் (Deed of Gift) அல்லது பரிமாற்றல் உறுதியின் (Deed of Exchange) மற்றும் விருப்பாவணத்தின் (Last Will) விடயத்தில் நொத்தாரிசு குறித்த உறுதியினது அல்லது சாதனத்தினது;

மூலப்பிரதிக்கு உறுதிமுடிப்புக்காரரின் அல்லது சாதனமுடிப்புக்காரரின் கடவுச்சீட்டு அளவினதான அத்தாட்சிப்படுத்தப்பட்ட புகைப்படங்களை ஒட்டுதல் வேண்டும்,

நொத்தாரிசு குறித்த புகைப்படங்கள் மீது தனது நொத்தாரிசு பதவிக்கான இலச்சினையை இடுதல் வேண்டும்,

விடயத்துக்கேற்ப அத்தகைய உறுதி அல்லது சாதனத்தை முடிப்பவர்களின் தேசிய அடையாள அட்டையின் (National

---

[42] Rule 17 (e) in section 31 of N.O.

Indentity Card) அல்லது கடவுச்சீட்டின் (Passport) அல்லது சாரதி உரிமத்தின் (Driving License) அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகளை பெற்று அவற்றை நொத்தாரிசின் பிரதியுடன் இணைத்து வைத்திருத்தலும் வேண்டும்.

உறுதியினது அல்லது சாதனத்தினது மூலப்பிரதிக்கு உறுதிமுடிப்புக்காரர்களின் அல்லது சாதனமுடிப்புக்காரர்களின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட புகைப்படங்கள் (certified photographs) ஒட்டப்படுதல் வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளபோதிலும் மூலப்பிரதியின் எந்த பக்கத்தில் (in which page of the original copy) அவை ஒட்டப்படுதல் வேண்டும் என்பது பற்றி தற்போதைய சட்டத்தில் எதுவும் வெளிப்படையாகக் கூறப்படவில்லை.

எனவே புகைப்படங்கள் மூலப்பிரதியின் எந்த பக்கத்தில் ஒட்டப்படுதல் வேண்டும் என்பது தொடர்பில் குறித்த நொத்தாரிசு சுயமாக தீர்மானத்தை மேற்கொள்ள முடியும். மேலும் உறுதியினது அல்லது சாதனத்தினது நொத்தாரிசின் பிரதிக்கும் புகைப்படங்கள் ஒட்டப்படுதல் விரும்பத் தக்கதாகும். ஏனெனில் எதிர்காலத்தில் உறுதிமுடிப்புக்காரர்களில் அல்லது சாதனமுடிப்புக்காரர்களில் எவர் ஒருவரது ஆள் அடையாளங்கள் தொடர்பான சர்ச்சை / கேள்வி எதுவும் எழுமாயின், அத்தகைய சந்தர்ப்பத்தில் அது குறித்த நொத்தாரிசுக்கு பாதுகாப்பாக அமையும்.

நொத்தாரிசு ஒருவர் மேலே விபரிக்கப்பட்டுள்ள விடயங்களை செயற்படுத்தத் தவறுவாராயின் அவர் தற்போதைய சட்டத்தின் **பிரிவு-34(1)(c)** இல் விபரிக்கப்பட்டுள்ள குற்றத்தைப் புரிந்துள்ளவராகக் கருதப்படுவார்.

தற்போதைய திருத்தச்சட்டத்தில் உள்ள ஏற்பாடுகளின்[43] பிரகாரம், அத்தகைய சந்தர்ப்பத்தில், நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறையான விளக்கத்தின் பின்னர் குறித்த நொத்தாரிசுக்கு எதிராகக் குற்றத்தீர்ப்பு அளிக்கப்படும்.

**18) உறுதி முடிப்புக்காரர்களின் அல்லது சாதன முடிப்புக்காரர்களின் கைவிரல் அடையாங்கள் உறுதியின் அல்லது சாதனத்தில் இடப்படுதல் வேண்டும் என்பது தற்போது கட்டாயமாக்கப்பட்டுள்ளதா? பிரிவு: 31இன் விதி 17(b) (iii).**

ஆம். நொத்தாரிசு ஒருவர் அவரால் சான்றுப்படுத்தப்படும் உறுதி அல்லது சாதனம் ஒன்றில் குறித்த உறுதி முடிப்புக்காரர்களின் அல்லது சாதன முடிப்புக்காரர்களின் கையொப்பத்திற்கு மேலதிகமாக அவர்களது விரல் அடையாளங்கள் அதில் இடப்படுவதை நொத்தாரிசு உறுதிசெய்துகொள்ளுதல் வேண்டும் என்பது தற்போது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

எனவே, உறுதியின் அல்லது சாதனத்தில் உறுதிமுடிப்புக்காரர்களின் அல்லது சாதனமுடிப்புக்காரர்களினது ஏதாவது விரல் ஒன்றின் அடையாளம் இடப்படுதல் வேண்டும் எனும் விடயம் தற்போது கட்டாயமாக்கப்பட்டுள்ளது என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும், அவ்வாறாக இடப்படும் குறித்த விரல் அடையாளம் யாருடையது என்பதை விவரிக்கும் வகையில், குறித்த விரல் அடையளத்துக்குரியவரின் பெயர் அதற்கு அருகாமையில் குறிப்பிடப்பட்டு அது குறித்த நொத்தாரிசினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

**19) நொத்தாரிசு ஒருவரால், உறுதியினது அல்லது சாதனத்தினது முதல் பக்கத்தில் கட்டாயமாக**

[43] Section 34 (1) (c) of N.O.

## விவரிக்கப்படவேண்டிய முக்கியமான விடயங்கள் எவை? - பிரிவு: 31இன் விதி 17 (c).

நொத்தாரிசு ஒருவர் அவரால் அத்தாட்சிப்படுத்தப்படும் உறுதி அல்லது சாதனம் ஒன்றின் முதல் பக்கத்தின் ஆரம்பப் பகுதியில் அவரால் கட்டாயமாகச் சேர்க்கப்படவேண்டிய / குறிப்பிடப்பட வேண்டிய முக்கிய விடயங்களாக பின்வருவன குறிப்பிடப்பட்டுள்ளன:[44]

i) நொத்தாரிசின் முழுப்பெயர்,

ii) நொத்தாரிசுக்கு உரித்தான இலக்கம்,

iii) நொத்தாரிசின் அலுவலக முகவரி, மற்றும்

iv) நொத்தாரிசின் தொலைபேசி இலக்கம்.

அவ்வாறாக உறுதியை அல்லது சாதனத்தை அத்தாட்சிப்படுத்தும் நொத்தாரிசு ஒருவர் ஏதாவது நிறுவனத்தில் / கம்பெனியில் (organization / company) சட்ட அலுவலர் ஒருவராக தொழில்புரிபவராக இருந்தால் அவர் அத்தகைய நிறுவனத்தின் / கம்பெனியின் பதிவுசெய்யப்பட்ட முகவரியையும் உறுதியின் முதல் பக்கத்தின் ஆரம்பப் பகுதியில் குறிப்பிடுதல் வேண்டும்.

## 20) நொத்தாரிசு ஒருவர் முன்னிலையில் ஏதேனும் பணம் பிரதிபலனாகச் செலுத்தப் பட்டால் அதுபற்றி, அவர் தனது அத்தாட்சிப்படுத்துதலில் எவ்வாறாக விவரித்தல் வேண்டும் ? பிரிவு: 31இன் விதி 20(e).

---

[44] Rule 17(c) in section 31 of N.O.

பிரதிபலனாக (consideration) அல்லது பிரதிபலனின் பாகமாக நொத்தாரிசு முன்னிலையில் ஏதேனும் பணம் செலுத்தப்பட்டதா அல்லது இல்லையா என்பதனையும், அத்துடன் பிரதிபலன் செலுத்தப் பட்டிருப்பின், அத்தகைய கொடுப்பனவின் உள்ளூர் நாணயத்திலான (local currency) உண்மைத் தொகையையும் குறித்த உறுதியில் அல்லது சாதனத்தில் குறிப்பிடப்படுதல் வேண்டும் என்பதுடன்,

மேலும் குறித்த கொடுப்பனவானது காசோலை மூலம் (by cheque), பணம்செலுத்துவதற்கான கட்டளை மூலம் (by pay order ), வங்கி வரைவு மூலம் (by bank draft) அல்லது வங்கியாளரின் காசோலை (by banker cheque) மூலம் செய்யப்பட்டிருப்பின் அத்தகைய சாதனத்தின் விபரங்கள் அத்தகைய கொடுப்பனவிற்கான சான்றாக அவரது சான்றுப்படுத்துதலில் நொத்தாரிசு குறிப்பிடுதல் வேண்டும்.[45]

## 21) நொத்தாரிசு ஒருவரால் நிறைவேற்றப்படும் உறுதி அல்லது சாதனம் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் என்பது தற்போது கட்டாயமாக்கப் பட்டுள்ளதா? - Section 30A:

ஆம். நொத்தாரிசு ஒருவர் செயற்படுவதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள நீதிநிர்வாக வலயத்தினுள் அமைந்துள்ள ஆதனம் தொடர்பில் நிறைவேற்றப்படும் உறுதி அல்லது சாதனம் ஒன்றை அத்தாட்சிப்படுத்தும் நொத்தாரிசு அது நிறைவேற்றப்பட்ட தினத்தில் இருந்து 30 நாட்களுக்குள் குறித்த உறுதியை அல்லது சாதனத்தை உரிய காணிப்பதிவு அலுவலகத்திற்கு பதிவுக்காகச் சமரப்பித்தல் வேண்டும்.

[45] Rule 20 (e) in section 31of N.O.

நொத்தாரிசு ஒருவர் செயற்படுவதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள நீதிநிர்வாக வலயத்திற்கு வெளியில் அமைந்துள்ள ஆதனம் தொடர்பில் நிறைவேற்றப்படும் உறுதி அல்லது சாதனம் ஒன்றை அத்தாட்சிப்படுத்தும் நொத்தாரிசு அது நிறைவேற்றப்பட்ட தினத்தில் இருந்து 60 நாட்களுக்குள் குறித்த உறுதியை அல்லது சாதனத்தை உரிய காணிப்பதிவு அலுவலகத்திற்கு பதிவுக்காகச் சமரப்பித்தல் வேண்டும்.[46]

முதன்மைச் சட்டவாக்கத்தில் (principal enactment) முன்பு காணப்பட்ட நடைமுறைகளின் பிரகாரம் நொத்தாரிசு ஒருவரினால் அத்தாட்சிப்படுத்தப்படும் காணி அல்லது அசையா ஆதனம் தொடர்பான உறுதி அல்லது சாதனம் உரிய காணிப்பதிவு அலுவலகத்திற்கு பதிவுக்காகச் சமரப்பித்தல் வேண்டும் எனக் கட்டாயப்படுத்தும் ஏற்பாடுகள் எதுவும் காணப்படவில்லை என்பது அவதானிக்கத்தக்கதாகும்.

இது முதன்மைச் சட்டவாக்கத்தில் காணப்பட்ட முக்கியமான குறைபாடுகளில் ஒன்றாகக் கருதப்பட்டது. இத்தகைய குறைபாடு அசையா ஆதனங்கள் மீதான உரித்து மாற்றம் / கைமாற்றம் நடைபெறும்போது மோசடிகள் இடம்பெறுவதற்கான ஒரு காரணமாக இருந்துள்ளது என்பது பொதுவான கருத்தாகும்.

## 22) தத்துவப்பத்திரம் (POWER OF ATTORNEY) பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் என்பது தற்போது கட்டாயமாக்கப் பட்டுள்ளதா?

[46] Section 30A of N.O.

ஆம். நொத்தாரிசு ஒருவரினால் சான்றுப்படுத்தப்படும் உள்நாட்டு தத்தவப்பத்திரம், அது நிறைவேற்றப்பட்ட தினத்தில் இருந்து 30 நாட்களுக்குள் குறித்த உள்நாட்டு தத்துவப்பத்திரம் **(LOCAL POWER OF ATTORNEY)** பதிவாளரை தலைமையதிபதியின் அலுவலகத்திற்கு **(REGISTRAR GENERAL'S OFFICE)** பதிவுக்காகச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

வெளிநாட்டுத் தத்தவப்பத்திரம், அது நிறைவேற்றப்பட்ட தினத்தில் இருந்து 60 நாட்களுக்குள் குறித்த வெளிநாட்டுத் தத்தவப்பத்திரம் **(FOREIGN POWER OF ATTORNEY)** பதிவாளர் தலைமையதிபதியின் அலுவலகத்திற்கு **(REGISTRAR GENERAL'S OFFICE)** பதிவுக்காகச் சமரப்பிக்கப்படுதல் வேண்டும்.

## 23) மேல் நீதிமன்றமொன்றின் முன்னர் நொத்தாரிசு ஒருவருக்கு எதிரான குற்றப்பகர்வு முன்வைக்கப்பட்டால் அவர் நொத்தாரிசு பதவியிலிருந்து இடைநிறுத்தப்படுவாரா? - in section 19 (1):

மேல் நீதிமன்றமொன்றின் முன்னர் நொத்தாரிசு ஒருவருக்கு எதிராக குற்றப்பகர்வொன்று முன்வைக்கப்பட்டுள்ளவிடத்து, விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர், சட்டத்துறைத் தலைமையதிபதியின் (Attorney General) விண்ணப்பத்தின்மீது, குறித்த நொத்தாரிசிற்கு எதிரான குறித்த வழக்கின் விளக்கம் முடிவுறும்வரை அவரை நொத்தாரிசுப் பதவியிலிருந்து இடைநிறுத்தலாம் என குறித்த திருத்தச் சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.[47]

## 24) புதிய ஆண்டிற்கான அனுமதிப்பத்திரத்துக்கு விண்ணப்பிக்கும்போது ஒவ்வொரு நொத்தாரிசும்

[47] Section 19(1) of N.O.

## சத்தியப்பத்திரம் ஒன்று சமர்ப்பித்தல் வேண்டும் என்பது தற்போது கட்டாயமாக்கப்பட்டுள்ளதா? - Section 28 (1A):

ஆம். ஒவ்வொரு நொத்தாரிசும் நேர்முன்னைய ஆண்டில் (Previous year) அவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட உறுதிகள் அல்லது சாதனங்கள் யாவற்றினதும் இணைப்பிரதிகள் உரிய காணிப்பதிவாளர் அலுவலகத்துக்கு ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ளன என்பதை உறுதிப்படுத்தும் சத்தியக் கடதாசி ஒன்றை புதிய ஆண்டிற்கான அனுமதிப்பத்திரத்துக்கு விண்ணப்பிக்கும்போது அத்தகைய விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும்.[48]

ஏற்கனவே செயற்பாட்டில் இருந்து வந்த நடைமுறைகளின் பிரகாரம் ஒவ்வொரு புதிய ஆண்டிற்கான அனுமதிப்பத்திரத்தை பெறுவதற்கான விண்ணப்பம் குறித்த ஆண்டின் பெப்ரவரி மாதம் 28ஆம் திகதி அன்று அல்லது அதற்கு முன்னதாகச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். ஆனால் தற்போதைய திருத்தச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், முன்னைய காலநிர்ணயம் நீக்கப்பட்டு, தற்போது குறித்த ஆண்டின் ஏப்பிரல் மாதம் 01 ஆம் திகதிக்கு முன்னதாக அத்தகைய விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் என ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை அவதானிக்கத்தக்கதாகும்.

## 25) நொத்தாரிசு ஒருவரால் காணிப்பதிவகத்துக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டிய வாராந்த நிரல் (Weekly List) மற்றும் மாதாந்த நிரல் (Monthly List) தொடர்பான ஏற்பாடுகளில் குறித்த திருத்தச் சட்டத்தின் மூலம் ஏதாவது மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளதா?

---

48 Section 28(1A) of N.O.

ஆம். நொத்தாரிசு ஒருவரால் அத்தாட்சிப்படுத்தப்படும் உறுதிகள் மற்றும் சாதனங்களின் விபரங்கள் அடங்கிய வாராந்த நிரல் (Weekly List) வாராந்தம் காணிப்பதிவகத்துக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும் எனும் தேவைப்பாடு குறித்த திருத்தச் சட்டத்தின் மூலம் நீக்கப்பட்டுள்ளது. எனவே வாராந்த நிரல் (Weekly List) காணிப்பதிவகத்துக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் காணிப்பதிவகத்துக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டிய மாதாந்த நிரல் (Monthly List) தொடர்பான ஏற்பாடுகளில் எந்தவிதமான மாற்றமும் ஏற்படுத்தப்படவில்லை. எனவே ஒவ்வொரு மாதத்துக்குமான மாதாந்த நிரல் (Monthly List) அந்த மாதத்தை அடுத்துவரும் மாதத்தின் 15 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ உரிய காணிப்பதிவகத்துக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டியது கட்டாயமாகும்.

## 26) நொத்தாரிசு ஒருவர் நொத்தாரிசு கட்டளை சட்டத்தின் 31 ஆம் பிரிவில் உள்ள விதிகளில் விவரிக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளை மீறி அல்லது புறக்கணித்து அல்லது அவற்றைப் பின்பற்றுவதை அலட்சியம் செய்து செயலாற்றுவாராயின் ஏற்படும் விளைவுகள் எவை? பிரிவு: 34(1) (a) (b) & (c).

**நொத்தாரிசு கட்டளை சட்டத்தின் 31 ஆம் பிரிவில் உள்ள விதிகள் (1), (31) அல்லது (32)** என்பனவற்றை மீறி மேற்குறித்தவாறாகச் செயற்படும் ஒவ்வொரு நொத்தாரிசும் குற்றத் தவறொன்றுக்கான குற்றச்சாட்டுக்கு உள்ளாதல் வேண்டும் என்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறையான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட தன்மேல், அவருக்கு அதனால் ஏற்படக்கூடிய ஏதேனும் குடியியல் பொறுப்புடன் மேலதிகமாக அவருக்கு ரூபா ஐந்தாயிரத்துக்கு **(ரூபா 5,000/=)** மேற்படாத தண்டம் விதிக்கப்படல் வேண்டும் (a fine not

exceeding five thousand rupees, in addition to any civil liability he may incur thereby).[49]

குறித்த சட்டத்தின் **31 ஆம் பிரிவில் உள்ள விதிகள் (2), (3) (6), (7), (11), (18), (21), (23), (24)** அல்லது (30A) என்பனவற்றை மீறி அல்லது புறக்கணித்து அல்லது பின்பற்றுவதை அலட்சியம் செய்து செயலாற்றுகின்ற ஒவ்வொரு நொத்தாரிசும் குற்றத் தவறொன்றுக்கான குற்றச்சாட்டுக்கு உள்ளாதல் வேண்டும் என்பதுடன், நீதிவானொருவா் முன்னரான சுருக்கமுறையான விளக்கத்தின் பின்னா் குற்றத்தீா்ப்பளிக்கப்பட்ட தன்மேல், அவருக்கு ஏற்படக்கூடிய ஏதேனும் குடியியல் பொறுப்புடன் மேலதிகமாக அவருக்கு ரூபா இருபத்தைந்தாயிரத்துக்கு **(ரூபா 25,000/=)** மேற்படாத தண்டம் விதிக்கப்படல் வேண்டும் (a fine not exceeding twenty five thousand rupees, in addition to any civil liability he may incur thereby).

குறித்த சட்டத்தின் **31 ஆம் பிரிவில் உள்ளதான மேலே விவரிக்கப்பட்டுள்ள விதிகள் தவிர்ந்த ஏனைய விதிகளை** மீறி அல்லது புறக்கணித்து அல்லது பின்பற்றுவதை அலட்சியம் செய்து செயலாற்றுகின்ற ஒவ்வொரு நொத்தாரிசும் குற்றத் தவறொன்றுக்கான குற்றச்சாட்டுக்கு உள்ளாதல் வேண்டும் என்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறையான விளக்கத்தின் பின்னா் குற்றத்தீா்ப்பளிக்கப்பட்டதன்மேல், அவருக்கு ஏற்படக்கூடிய ஏதேனும் குடியியல் பொறுப்புடன் மேலதிகமாக அவருக்கு ரூபா ஐம்பதாயிரத்துக்கு **(ரூபா 50,000/=)** மேற்படாத தண்டம் விதிக்கப்படல் வேண்டும்

[49] Rule (1), (31) & (32) in section 31 of N.O.

(a fine not exceeding twenty five thousand rupees, in addition to any civil liability he may incur thereby).

## 27) மேற்குறித்தவாறு நெறிபிறழ்வாக நடந்துகொள்ளும் நொத்தாரிசு ஒருவர் தொடர்பில் பதிவாளர் தலைமையதிபதியினால் எடுக்கப்படும் நடவடிக்கைகள் எவை? பிரிவு 34(2) & (3):

பதிவாளர் தலைமையதிபதி **(**Registrar General), எழுத்திலான அறிவித்தல் ஒன்றின் மூலம் தனிப்பட்டரீதியில் சேர்ப்பிக்கப்பட்ட அல்லது பதிவுத்தபால் மூலம் அவரிடம் சேர்ப்பிக்கப்பட்ட எழுத்திலான அறிவித்தல் மூலம் அத்தகைய நோக்கத்திற்கான அத்தகைய அறிவித்தலில் அவர் குறித்துரைக்கக் கூடியவாறான அத்தகைய மேலதிக காலப்பகுதியினுள் குறித்த சட்டத்தின் 31 **ஆம் பிரிவில் உள்ள விதி** 26 இல் (rule 26 in section 31) ஏற்பாடுசெய்யப்பட்டுள்ள தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுவதற்கு குறித்த நொத்தாரிசைக் கோரலாம்.[50]

அத்தகைய அறிவித்தலின் நியதிகளுடன் இணங்கியொழுகத் தவறுகின்ற அத்தகைய நொத்தாரிசு ஒருவரின் விடயத்தில், பதிவாளர் தலைமையதிபதியினால் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் மீது விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் தகுதியானதெனக் கருதக் கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு குறித்த நொத்தாரிசை அவரது நொத்தாரிசு பதவியிலிருந்து இடைநிறுத்தலாம்.[51]

மேற்குறித்தவாறாக அவரது பதவியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ள நொத்தாரிசு ஒருவர் அத்தகைய இடைநிறுத்தல் பற்றிய அறிவித்தலை

[50] Section 34(2).
[51] Section 34(2).

பெற்றுக்கொண்ட திகதியிலிருந்து ஏதேனும் உறுதி அல்லது சாதனத்தை அத்தாட்சிப்படுத்தலாகாது / சான்றுப்படுத்தலாகாது.[52]

## 28) இடைநிறுத்தல் அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட காலத்தினுள் நொத்தாரிசு ஒருவர் தனது இணைப்பிரதிகளைச் சமர்ப்பிப்பதற்குத் தவறும்போது எடுக்கப்படும் நடவடிக்கைகள் எவை? பிரிவு 34 (5):

இடைநிறுத்தல் அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட காலத்தினுள் தனது இணைப்பிரதிகளைச் சமர்ப்பிப்பதற்கு தவறுகின்ற நொத்தாரிசு ஒருவர் அத்தகைய குற்றத் தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டும்.

அத்தகைய குற்றத் தவறு தொடர்பில், நீதவானொருவர் முன்னரான சுருக்க முறையான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ரூபா ஐந்து இலட்சத்தை **(ரூபா 5,00,000/=)** விஞ்சாத தண்டப்பணம் செலுத்துவதற்கு ஆளாதலும் வேண்டும் என குறித்த திருத்தச் சட்டம் ஏற்பாடு செய்கின்றது[53].

மேலும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர், பதிவாளர் தலைமையதிபதியினால் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் மீது குறித்த நொத்தாரிசின் உரிமத்தை இரத்துச் செய்யலாம் (the Minister may cancel the licence of the notary ).[54]

## 29) சட்டத்தரணியாக அல்லாத ஒருவர் நொத்தாரிசாக செயற்படுவதற்கான நியமனத்தை பெறுவதற்கான

[52] Section 34(3).
[53] Section 34(5).
[54] Ibid.

**தகைமைகள் என்ன? மற்றும் அவர் எத்தகைய நடவடிக்கைமுறைகளைப் (PROCEDURES) பின்பற்றுதல் வேண்டும்?**

இவ்விடயம் தொடர்பில் முதன்மைச் சட்டவாக்கமான (Principal enactment) 1907 ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க நொத்தாரிசு கட்டளைச்சட்டத்தின் (Notaries Ordinance No: 01 of 1907) பிரிவு 4 (1) (a) (b) (c) & (d) என்பவற்றில் உள்ள ஏற்பாடுகளில் தெளிவாக விபரிக்கப்பட்டுள்ளன.

குறித்த சட்ட ஏற்பாடுகள் பின்வரும் தேவைப்பாடுகளை எடுத்துரைக்கின்றன:

i) அவர் நற்பண்புகளுடன் கௌரவமிக்கவராகவும்,

ii) அவர் 21 வயதுக்குக் குறையாதவராகவும்,

iii) நொத்தாரிசாகவும் செயற்படும் சட்டத்தரணி ஒருவரிடத்தில் இரண்டுவருட காலங்கள் தொடர்ச்சியாக கட்டுரு / வரைவு எழுதுநராக (Articled clerk) அவர் உரியவாறு செயலாற்றியும்,

iv) விடயத்துக்குரிய அமைச்சரினால் பிரகடனப்படுத்தப்பட்டு நடாத்தப்படும் பகிரங்கப் போட்டிப் பரீட்சையில் அவர் சித்தியடைந்தும், இருத்தல் வேண்டும்.

**30) மேற்குறித்த பரீட்சையில் சித்தியடைந்தவர்கள், சட்டக் கல்லூரியினால் (Law College) நடாத்தப்படும் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டுமா?**

ஆம். மேற்குறித்த பரீட்சையில் சித்தியடைந்தவர்கள், நொத்தாரிசு தொழிலுக்கு அனுமதிக்கப்படுவதற்காக சட்டக் கல்லூரியினால் (Law College) நடாத்தப்படும் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

சட்டக் கல்லூரியினால் (Law College) நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியடைந்தவர்களின் பெயர் பட்டியல் பதிவாளர் நாயகத்திற்கு அனுப்பிவைக்கப்படும்

குறித்த பட்டியலில் உள்ளவர்கள், நொத்தாரிசு தொழில் புரிவதற்கான ஆணையை பெறுவதற்கு தகுதி பெற்றுள்ளார்கள் என பதிவாளர் நாயகத்தினால் பட்டியலிடப்பட்டு உறுதிப்படுத்தப்படும்.

மேலும், அவ்வராறாக நொத்தாரிசு தொழில் புரிவதற்கான ஆணையை பெறுவதற்கு தகுதி பெற்றுள்ளார்கள் என பதிவாளர் நாயகத்தினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளவர்கள், அவர்கள் வதியும் பிரதேசத்திற்கு உரித்தான மேல்நீதிமன்றத்துக்கான நீதிநிர்வாக பிரிவில் நொத்தாரிசாகத் தொழில் புரிவதற்கு உரித்துடையவர்கள்

## முடிவுரை (Conclusion):

ஒவ்வொரு நொத்தாரிசும் மற்றும் நொத்தாரிசாகவும் தொழில்புரியும் சட்டத்தரணிகள் ஒவ்வொருவரும் நொத்தாரிசு சட்டத்தின் ஏற்பாடுகளில் விவரிக்கப்பட்டுள்ள அவர்களுக்குரிய கடமைகளையும் கடப்பாடுகளையும் (duties and obligation) உரிய முறையில் நிறைவேற்றுதல் வேண்டும். எனவே நொத்தாரிசாகத் தொழில்புரியும் ஒவ்வொருவரும் நொத்தாரிசு திருத்தச் சட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய நடைமுறை விடயங்கள் யாவற்றையும் நன்கு அறிந்திருப்பதுடன் அவை பற்றி தெளிவான விளக்கத்தைக் கொண்டிருக்கவேண்டியதும் மிகவும் முக்கியமானது.

இதன் மூலம் எதிர்காலத்தில் காணி மற்றும் அசையா ஆதனங்கள் மீதான சொத்தாண்மை / சொத்துவ உரித்து மாற்றங்கள் தொடர்பான செயற்பாடுகள் இடம்பெறும்போது ஏற்படக்கூடிய தவறுகள், பிழைகள், மற்றும் மோசடிகள் என்பனவற்றை இயன்றளவிற்கு தவிர்த்துக்கொள்ள முடியும். ஆனாலும் மேற்குறித்த திருத்தச் சட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய நடைமுறை விடயங்களை சம்பந்தப்பட்ட திறத்தவர்கள் எந்தளவுக்கு நடைமுறைப்படுத்து கின்றார்கள் என்பதிலேயே அதன் வெற்றி தங்கியுள்ளது.

எனவே, நொத்தாரிசு ஒருவர் காணி மற்றும் அசையா ஆதனங்கள் தொடர்பான உறுதிகள் மற்றும் ஆவணங்களை தயாரிக்கும்போது மிகவும் கவனமாகப் பரிசீலனை செய்து காணியின் அல்லது அசையா ஆதனத்தினது உரித்து தொடர்பில் அவர் சரியானதும் உறுதியானதுமான தீர்மானத்தை மேற்கொள்ளுதல் வேண்டும்.

ஒவ்வொரு நொத்தாரிசும் மற்றும் நொத்தாரிசாகவும் தொழில்புரியும் சட்டத்தரணிகள் ஒவ்வொருவரும் மேற்குறித்த திருத்தச் சட்டத்தில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களை நன்கு அறிந்திருப்பதுடன் அவை பற்றி தெளிவான விளக்கத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். மேலும், மேற்குறித்த திருத்தச் சட்டத்தில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களை உரியமுறையிலும் சரியானமுறையிலும் செயற்படுத்துவதன் மூலம் ஒவ்வொரு நொத்தாரிசும் அவர்களது சேவைபெறுநர்களுக்கும் (clients) அவர்கள் சார்ந்த சமூகத்துக்கும் சிறப்பான சேவையை வழங்கமுடியும்.

நன்றி

**இராமலிங்கம் திருக்குமாரநாதன்.**
**மூத்த சட்டத்தரணி,**
**இல: 127, புனித மரியாள் வீதி,**
**திருகோணமலை.**

**தொலைபேசி இலக்கம் : 026 – 2224877.**

**இலத்திரனியல் அஞ்சல் முகவரி: trincothiru@yahoo.com , trincothiru@gmail.com**